சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7 | இதழ்: 05 | அக்டோபர் - 2025 | விலை - ரூ.20/-

VOL:7 | ISSUE: 05 | October - 2025 | Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-5 அக்டோபர்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

உன்னை விட்டுச் சென்றவர்களை நினைத்து ஒரு போதும் வருத்தப்படாதே! அதற்குப்பதில் அவர்களுக்கு நன்றி கூறு. அவர்கள் உன்னைவிட்டு செல்லவில்லை என்றால் நீ யார் என்பதை அறிந்து கொண்டிருக்க மாட்டாய்!

யாரை நீ நல்லவர்கள் என்று நினைத் தாயோ, அவர்களே உனக்கு துரோகம் செய்துவிட்டார்களே என்று வருத்தப் படாதே! நீ செய்த மிக பெரிய தவறு எது தெரியுமா! நல்லவர்களை விட்டு விட்டு தீயவர்களை நம்பியது தான்.

வாழ்வில் நீ எதையெல்லாம் நிரந்தரம் என்று நினைத்தாயோ, அவை எல்லாம் நிதர்சனம் இல்லாத பொய்கள் என்பதை புரிந்துக் கொள். உன்னைவிட்டு சென்றவர் களால் உனக்கு ஒரு நன்மையும் இல்லை என்பதை உணர்ந்து கொள்.

உன் வெகுளிதனத்தையும்,அப்பாவி குணத்தையும் பார்த்து உன்னை நம்பவைத்து ஏமாற்றி இருக்கின்றார்கள். ஆனாலும் இன்னும் நீ அவர்களுக்காக வருந்துவதை பார்க்கும் பொழுது உன் அறியாமையை நினைத்து வருந்துகிறேன்.

போனது போகட்டும் இனி உன்னை நான் அப்படி விடமாட்டேன். யாராவது உன்னை ஒதுக்கி வைத்தால் கவலைபடாதே.

உன்னை எவ்வளவு தூரத்தில் வைக்கிறார்களோ அவ்வளவு தூரத்தில் வாழக் கற்றுக்கொள். அதனால் ஒரு நஷ்டமும் இல்லை. உன்னோடு நான் இருக்கிறேன். தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும். கவலைப்படாதே உன்னுடன் நான் எப்போதும் இருப்பேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் எண்பத்து ஏழாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம் 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத இதழை சாயிதாசன் திரு. கோபால் சாய்ராம் அவர்கள் வெளியிட, காயத்திரி புரோகித நிலையம் ஜோதிடர் மற்றும் புரோகிதர் திரு.என். ராகவேந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

விழாவில் ஏராளமான சாயி தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திரு. ஜெயலட்சுமி தேவக்குமார், திரு.தனம் அகஸ்டின், திரு.மாதங்கி பாலாஜி ஆகியோர் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். திரு.பிரபு அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். திரு.பாலாஜி அவர்கள் நன்றியுரை வழங்க விழா சிறப்பாக நிறைவடைந்தது.

சாய் தியானாலயா ஆத்மஞான குழுவின் அன்னதானக் குழுவினர் அனைத்து பக்தர்களுக்கும் சுவையான அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

02.10.25 விஜயதசமி அன்று பகவான் சாயிநாதரின் 107 வது குருபூஜை திருநாள் நாடெங்கும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. சாய் பக்தர்கள் தங்களால்



இயன்ற அளவு மக்களுக்கு உதவி களை செய்து அருகில் இருக்கும் சாயிநாதரின் ஆலயத்திற்கு சென்று வணங்கி வாருங்கள்.

சாயிநாதரின் பக்தர்களான நாம் முடிந்தவரை அடுத்தவர் களுக்கு நம்மாலான சிறிய உதவி களையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் சாய் பகவான் இந்த உலக மக்களுக்கு உதவும் பொருட்டு மனித உருவெடுத்து 80 ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்திருக்கின்றார். அவர் தன் வாழ்நாள் முழுவதும் யாருக்காவது ஏதாவது வகையில் உதவிக்கொண்டே இருந்திருக் கின்றார் என்பதை சத் சரிதம் மூலம் உணர்ந்திருப்பீர்கள்.

அதையும் தாண்டி, அவர் யாருடைய உதவியையாவது வேண்டினாலும் உடனடியாக அதற் குண்டான கூலியை கொடுத்து விடுவார். ஏணி கொடுத்தவருக்கு இரண்டு ரூபாய் கூலி கொடுத் ததை சத்சரிதத்தில் படித்திருப் பீர்கள். எனக்கு ஒரு ரூபாய் கொடுத்தவனுக்கு நான் கடன் பட்டிருக்கின்றேன். அவனுக்கு நான்





நூறு ருபாயாக திருப்பித்தருவேன் என்பது அவரது வாக்கு.

நாம் சாய் பக்தர்கள் என்று கூறிக் கொள்வதற்கு சாயியை பூஜிப்பது மட்டும் போதாது. முடிந்தவரை அவருடைய செய்கைகளில் ஒன்றையாவது பின்பற்றுவதே நாம் சாய் பக்தர்கள் என்பதற்கு அர்த்தமாகும்.

வெளியில் செல்லும்போது உங்கள் பைகளில் இரண்டு பிஸ்கெட் பாக்கெட்டாவது வைத்துக் கொள்ளுங்கள்.

முடியவில்லை என்றால் பத்து சாக்லெட், இரண்டு பேனா, எங்காவது யாருக்காவது கொடுங்கள். அவர்களது முகம் மலர்வதைப் பாருங்கள். சாயி நம்மை ஆசீர்வதிப்பதை உணர்வீர்கள்.



எங்காவது, எதையாவது, யாருக்காவது கொடுத்துப்பாருங்கள், ஒருபோதும் நமக்கு குறைவு என்பதே இருக்காது. இறைவன் சாயி நம்மை நிறைத்துக்கொண்டே இருப்பார். பொருளாதாரத்திலும், மனதளவிலும் நிறைவு என்பதை உடனடியாக உணர முடியும்.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

உடலே ஆலயம்

தியானமானது உன் மனதுடன் உன்னைப் பேசச்செய்யும். ஆசனம் உன் உடலோடு பேச்செய்யும். அதைத் தேடு தன் உடலை காக்காதவன் புலுவாய் புலுத்து மடிவான் என்று கூறுகின்றது திருமந்திரம். உனது அகக் குடும்பமாகிய உடலை கவனித்தால் அதுவே உனது வெளிக்குடும்பத்தைக் காக்கும். ஒவ்வொரு வருடைய குலதெய்வம் அவர்களது உடலே!



தன் உடலுக்கு ஒருவன் செய்யும் தொண்டே மிகச்சிறந்த தொண்டாகும். தன் உடலுக்காக உழைக்கும் உள் உறுப்புகளை ஆராதிப்பது ஆலயத்தை தொழுவதைவிட சிறந்தது. மற்ற உயிர்களுக்கு செய்யும் பாவங்களுக்கு விமோசனம் உண்டு. உன் உடலுக்கு நீ செய்யும் பாவத்துக்கு விமோசனம் இல்லை.

ஊர்ஊராக சுற்றாமல் உன் உடலைச்சுற்று. உத்தமன், உயர்ந்தவன் என்று ஊர் உன்னை பாராட்டினாலும், உன் உடல் உன்னை கைவிட்டால் உன் பட்டம், பதவி அனைத்தும் பிடி சாம்பலே! உலகின் அனைத்து ரகசியங்களும் உன் உடலுக்குள்ளே இருக்கின்றது. மந்திரமும், தந்திரமும் நாடாதே! உன் உடலே ஆலயம் என்பதை உணர்ந்து கொள்.

அகங்காரம்

ஒரு முறை நாரதர் இறைவனிடம் அகங்காரம் எங்கு சுவாமி ஆரம்பிக்கின்றது என்று கேட்டார். உடனே இறைவன், நீ பூலோகத்திற்குச் சென்று ஒரு உயர்ந்த ஆத்மாவை கண்டுபிடித்து வா என்றார். சுவாமி, எப்படி அத்தகைய மனிதனை கண்டுபிடிப்பது? என்று கேட்டார் நாரதர். தன் இதயத்திலிருந்து யார் ராமா, கிருஷ்ணா, மாதவா, கோவிந்தா என்று கூறுகிறானோ, அவனே உண்மையான ஆத்மா, என்று கூறினார் இறைவன்.



மனிதன் என்றால் பரிசுத்தமான இதயம் படைத்தவன் என்று பொருள். பரிசுத்த இதயத்திலிருந்து பவித்திரமான இறைவனின் நாமங்கள் தான் வெளிவர வேண்டும். அப்படிப்பட்டவனே நிஜமான மனிதன். உலகியல் சம்பந்தமான எந்த ஒரு காரியத்தையும் செய்யலாம். அது பௌதிக உலகத்துக்காக, அவற்றால் எல்லாம் உண்மையான ஆத்மா பாதிக்கப்படாது என்றார் இறைவன்.

உடனே நாரதர் கூறினார், சுவாமி, நித்தியமும் நிரந்தரமாய் நான் கோவிந்தா, நாராயணா என்று சொல்லி வருகிறேனே! நாமஸ்மரணை செய்யாத நேரமே கிடையாது எனக் கூறலாம். ஆனால் என்னை விடச் சிறந்த பக்தன் இருக்கிறானா? என்றார். உடனே நாரதரைப்பார்த்து இறைவன் கூறினான் இங்கேதான் அகங்காரம் ஆரம்பமாகிறது. நான் பக்தன் என நினைக்கும் போது அகங்காரத்தின் சுவடுகள் தெரிய ஆரம்பிக்கின்றன.

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-19

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

அரூபமான கடவுள் பக்தர் களுக்காக சாயி என்ற பெயருள்ள ரூபம் எடுத்துக் கொண்டார். பிரபஞ்சம் என்னும் மிகப்பெரிய நாடகத்தில், மாயை என்னும் நாயகியுடன் இணைந்து நடிக்கலானார். நாம் அந்த சாயி என்ற ரூபத்தை நினைவுபடுத்திக் கொள்வோம்.

நான் சாயியை நேரி டையாக வர்ணிக்கின்றேன். நீங்களும் என்னுடன் கற் பனை யாக இணைந்து கொள் ளுங்கள்.

இதோ இப்போது தான் மதிய ஆரத்தி முடிந்திருக்கின்றது. சாயிபாபா தனது இ ரு க் கை யி ல் இ ரு ந் து மெ ல் ல எழுந்து ம சூ தி க் கு



வெளியே வந்து தூணில் சாய்ந்து கொண்டு கருணையோடு பக்தர்களுக்கு உதி விநியோகித்துக் கொண்டிருக்கின்றார். பக்தர்கள் அவரிடம் இருந்து உதி வாங்குவதற்கு முன்பு அவரது பாதங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டும், அவரையே உற்றுப்பார்த்துக் கொண்டும் அவரது உதி மழையில் நனைந்துகொண்டும் இருந்தனர்.

பாபா தம் கை நிறைய உதியை அள்ளி பக்தர்களின் கைகளில் கொடுத்தும் அவர்களது நெற்றியில் தம் திருக்கரங்களால் பூசிவிட்டும் அவர்களை, அன்புடன் ஓ! பாவ் அனைவரும் சாப்பிட்டுவிட்டு பத்திரமாக உங்கள் இருப்பிடத் திற்குச் செல்லுங்கள். என்று ஒவ்வொரு பக்தரிடமும் கூறி வழி அனுப்பி வைக்கின்றார்.

வாசகர்களே! இப்போதுகூட நீங்கள் இக்காட்சியை உங்கள் மனக்கண்களில் கண்டு ரசிக்கலாம். அனைவரும் சாயிநாதரின் பாதங்களில் இருந்து மெல்ல அவரது முகம் வரைக்கும் நம் மனக்கண்களுக்குள் கொண்டு வந்து தியானிப்போம். பாபாவின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து தரிசனம் பெற்று திரும்புவோம்.

ஒரு சில நாட்களாக இராதா கிருஷ்ணமாயி மலேரியா காய்சலால் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே முடங்கிக்கிடந்தாள். அன்று மத்தியான வேளையில் பாபா திடீரென்று மசூதி யில் இருந்து புறப்பட்டு இராதா கிருஷ்ணமாயியின் வீட்டிற்கருகில்



வந்து நின்றார். அருகில் இருந்தவர் களிடம் எனக்கு ஒரு ஏணி கொண்டு வாருங்கள் என்று கூறினார்.

யாரோ ஒருவர் ஒரு ஏணியைக் கொண்டு வந்தார். உடனே பாபா அதை வாமன் கோந்தகர் என்பவரது வீட்டு கூரையின் மீது சாத்தி வைக்கச் கூறினார். ஏணி கொண்டுவந்தவரும் அவ்வாறே செய்தார்.

உடனே பாபா ஏணி வழியாக உச்சியில் ஏறி கூரையில் நடந்து இராதாகிருஷ்ண மாயியின் வீட்டுக் கூரையின் மீது நடந்து மற்றொரு மூலையில் ஏணியை வைக்கச் செய்து அதில் இறங்கி வந்தார்.

இதை ஏன் செய்தார் என்பதை அப்போது ஒருவரும் அறியவில்லை. ஆனால் மாறாக பாபா பைத்தியக்காரர் போல் எதையோ

செய்கின்றார் என்று நினைத்தனர். சிலர் இராதாகிருஷ்ணமாயியின் காய்ச்சலை விரட்டத்தான் அவ்வாறு செய்தார் என்று கூறினர். ஆயினும் ஏணியை விட்டு இறங்கியதும் பாபா ஏணி கொண்டு வந்தவருக்கு இரண்டு ரூபாய் கொடுத்தார்.

அருகில் இருந்த ஒருவர் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, பாபா ஏணிக்கு இரண்டு ரூபாய் கூலி என்பது மிக அதிகம். என்றார். பாபா அவரைப்பார்த்து, ஒருவரும் மற்றவர்களுடைய உழைப்பை இலவசமாக பெற்றுக்கொள்ள கூடாது. உழைப்பவனுக்கு அவன் மனம் மகிழும் வண்ணம் கூலி கொடுக்கப்பட வேண்டும். அதுவும் அவன் வேர்வை காயும் முன்னே கொடுத்துவிட வேண்டும். என்றார்.


இக்கொள்கை எல்லா காலங்களுக்கும் பொருந்தும் அல்லவா? ஆனால் பாபாவின் செய்கைக்கு அதுதான் காரணமாகுமா? சற்றே சிந்தித்தால் வேறு சில சூட்சுமங்கள் விளங்கும். ஆம் இந்நிகழ்ச்சி நடந்த ஓரிரு நாட்களில் இராதாகிருஷ்ண மாயி உடல் நலம் பெற்றாள். ஆனால் மிகக்குறுகிய காலத்திலேயே அவள் உயிரை விட்டாள்.

தனக்கு ஏராளமான வேலைகளை தன்னலம் கருதாது செய்து வந்த இராதாகிருஷ்ணமாயிக்கு மிகச்சிறந்த கூலியை பாபா தந்தார் என்பதே இக்கதையின் சூட்சுமம். ஆம் தனக்காக சமஸ்தானத்தை அமைக்க வேண்டும் என்று ஊர் மக்கள் பெரும்பாலானவர்களிடம் கெட்டபேரை சம்பாதித்த மாயிக்கு தனக்கு முன்பாகவே உடலை விடச்செய்து அவளது ஆன்மாவை தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

சாதாரணமாக ஒரு ஏணி எடுத்து வந்தவருக்கே இரண்டு ரூபாய் கூலி கொடுத்தவர், பத்தாண்டுகளாக பல ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் தாங்கிக்கொண்டு தன்னுடைய கடமையே கண்ணும் கருத்துமாக செயல்பட்ட இராதாகிருஷ்ணமாயிக்கு நற்கதி என்ற கூலியை கொடுக்க மாட்டாரா என்ன?

இப்படித்தான் ஒருமுறை பாபாவினுடைய கதைகளை பக்தர்களுக்கு எடுத்துக் கூறும் பணியை திறம்படச் செய்து வந்த தாஸ்கணு மகராஜ் அவர்கள் ஈசாவாஸ்ச உபநிஷத்திற்கு மராத்தியில் விளக்க உரை எழுத ஆரம்பித்தார். ஈசாவாஸ்ய உபநிஷதம் எல்லா உபநிஷதங்களையும் விட மிகச்சிறியது பதினெட்டு சுலோகங்கள் மட்டுமே உள்ள இந்த உபநிஷதம் ஆன்மாவைக்குறித்து மிக உன்னதமான அகநிலைக் கருத்துக்களை பதிவு செய்திருக்கின்றது.

உபநிஷதத்தை மொழிபெயர்ப்பு செய்த தாஸ்கணு மகராஜ் அதன் சாராம்சத்தை சரிவர புரிந்து கொள்ளாததனால் தன்னுடைய மொழிபெயர்ப்பில் திருப்தி கொள்ளவில்லை. எனவே பல அறிஞர்களை கலந்து



ஆலோசித்தார். ஆயினும் சரியான விடை கிடைக்காமல் தடுமாறினார். இறுதியில் ஆத்மானுபூதி பெற்ற ஒருவரே உபநிஷத்திற்கு சரியான விடையளிக்க முடியும் என்று கருதி, சாயிபாபாவிடமே அது பற்றி விவாதிப்பது என்று முடிவு செய்தார்.

எனவே சீரடிக்குச் சென்று சாயிபாபாவை சந்தித்து அவரை வணங்கிப் பணிந்து ஈசாவாஸ்ய உபநிஷத்திற்கு சரியான விளக்கங் களைக்கூறும்படி வேண்டிக் கொண்டார். அவரை பாபா ஆசீர்வதித்து, இது சம்பந்தமாக நீ கவலைப்பட வேண்டாம். இவ்விசயத்தில் ஒரு கஷ்டமும் இல்லை. நீ வீட்டிற்கு திரும்பிப் போகும் போது விலேபார்லேயில் காகா சாஹேப் தீட்சித்தின் வீட்டு வேலைக்காரி உன் சந்தேகத்தை தீர்த்து வைப்பாள் என்றார்.

அதை கேட்டுக்கொண்டிருந்த மக்கள் பாபா தாஸ்கணுவை கிண்டல் செய்கின்றார் என்றும், கல்வி அறிவு இல்லாத வேலைக்காரி எவ்வாறு உபநிஷதத்தைப் பற்றி சந்தேகங்களை தீர்த்து வைக்க முடியும் என்றும் பேசிக்கொண் டனர். ஆயினும் தாஸ்கணுவிற்கு பாபாவின் மேல் மிக உறுதியான நம்பிக்கை இருந்தபடியால் பாபாவின் வாக்கு பொய்காது என்று உறுதியாக நம்பினார்.

பாபாவின் வாக்கில் உறுதி யாக இருந்த தாஸ்கணு, தான் பாபாவிடம் விடைபெற்று ஊருக்குத் திரும்பும்போது, விலேபார்லேவில் உள்ள காகா சாஹேப் தீட்சித்தின் வீட்டிற்குச் சென்று அன்றிரவு அவருடன் தங்கினார். மறுநாள் அதிகாலையில் அவர் கண்விழித்தபோது, அவரது காதில் இனிமையான பெண்குரலில் ஒரு பாட்டு அவரை ஈர்த்தது.

அழகழகாய் கலர்களுடன் கண்ணைக்கவரும் புடவை, மனதை மயக்கும் ஓவியங்களுடன் அற்புதமான கலவை. மயில்தோகை போல முந்தானையும், மாலை நேரத்து சூரிய ஒளியாய் கரைகளும், கண்ணையும் கருத்தையும் கவருதே! என்ற கருத்துடைய அந்தப் பாட லின் கருத்தும், இனிமையான குரலோசையும் தாஸ்கணுவை இழுக்க உடனே எழுந்து குரல் வந்த புழக்கடையை நோக்கி ஓடி னார். அங்கே காகா அவர்களின் வேலைக்காரனான நாம்யா என்ப வனின் சகோதரியான ஒரு சின்னப் பெண்தான் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள்.

அப்போது அவள் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாள். அவளது மேனியில் கிழிந்த கந்தை போன்ற துணி ஒன்றை உடுத்திக் கொண்டிருந்தாள். அவளது வறுமை யான நிலையிலும், அவளது உள்ளம் ஆனந்தமான நிலையில் இருப்பதைக் கண்டு தாஸ்கணு பெருமிதப் பட்டார். அதே வேலையில் அவளுடைய வறுமைக்காக வேதனைப் பட்டார். மறுநாள் தனது நண்பர் ராவ் பகதூர் மூலமாக அவளுக்கு நல்ல உயர்தரமான ஆடை ஒன்றை வாங்கிவரச் செய்து அவளுக்கு அளித்தார்.

பசியால் வாடும் ஒருவனுக்கு, நல்ல விருந்து கிடைத்ததைப்போல நல்ல உடையைக் கண்டதும் அவளது ஆனந்தம் கரைபுரண்டு ஓடியது. அடுத்தநாள் அந்த புதிய ஆடையை கட்டிக்கொண்டு, மகிழ்ச்சியுடனும், கொண்டாட்டத்துடனும் சுற்றிச் சுற்றி ஓடினாள். மற்ற சிறுமிகளிடம் புதிய உடையைக் காட்டி மகிழ்ந்தாள்.


அதற்கடுத்தநாள் புதிய ஆடையை வீட்டில் வைத்துவிட்டு பழையபடி கந்தல் ஆடையை அணிந்து கொண்டு வேலைக்கு வந்தாள். ஆனால் முதல்நாள் மாதிரியே மிகுந்த ஆனந்தத்துடன் காணப்பட்டாள்.

இதைக்கண்ட தாஸ்கணுவிற்கு உபநிஷதத்தின் உட்பொருட்கள் மிகத் தெளிவாக விளங்கிற்று. எவ்வாறெனில் அச்சிறுமி மிகவும் ஏழையானதால் இலவசமாக கிடைக்கும் கிழிசல் கந்தலையே அணிய வேண்டும். ஆனால் தற்போது அவளிடம் புதிய ஆடை ஒன்று உள்ளது. அதை அவள் வீட்டில் பத்திரப்படுத்தி இருக்கின்றாள். மீண்டும் இன்று பழைய கந்தலையே உடுத்தியிருந்தாலும் எள்ளவும், துன்பமோ, மனச்சோர்வோ இல்லாமல் அவற்றை அவள் தாங்கிக் கொண்டாள்.

இவ்வாறாக, நமது இன்ப துன்ப உணர்ச்சிகள் எல்லாம் நமது மனதைப் பொறுத்தே அமைகின்றன என்பதை தாஸ்கணு உணர்ந்தார். இந்நிகழ்ச்சியை அவர் ஆழ்ந்து ஆராய்ந்தார். கடவுள் முன்னும் பின்னும் எல்லா திசைகளிலும் எல்லா பொருட்களிலும் ஊடுருவி இருக்கின்றார். கடவுளால் ஒருவனுக்கு வழங்கப்பட்டவைகள் எல்லாம் அவனது நன்மைக்கே ஆகும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொள்ள வேண்டும்

கடவுளால் தனக்கு கொடுக்கப் பட்டவைகள் அனைத்தையும் மகிழ்ச்சியோடு அனுபவிக்க வேண்டும். அதே நேரம் அவை ஈசனுக்கே சொந்தமானவை. தன்னுடையது அல்ல என்ற எண்ணம் அழுத்தமாக இருக்க வேண்டும்.

இக்குறிப்பிட்ட நேரத்தில் ஏழைச்சிறுமியின் வறுமை நிலை அவளது கிழிசல் கந்தல் உடை, புது உடை, அதை அளித்தவர், அதைப் பெற்றவள், அதனை ஏற்றுக் கொள்ளுதல் எல்லாம் கடவுளின் கூறுகளே அவரே எல்லாவற்றிலும் ஊடுருவிப் பரந்து இருக்கின்றார்.



என்பதை தாஸ்கணு உணர்ந்து கொண்டு உபநிஷதக் கருத்துக்களை நடந்த நிகழ்ச்சிகளுடன் இணைத்துப் பார்த்து நடைமுறை விளக்கத்தினைப் பெற்றார்.

மேற்கூறிய நிகழ்ச்சியில் இருந்து பாபாவின் வழிகள் தனியானவை என்பதும், மற்றவைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டவை என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்வீர்கள் என்பது திண்ணம். பாபா ஒரு போதும் சீரடியைவிட்டு வெளியே சென்றதில்லை. என்றாலும் ஒரு சிலரை மச்சீந்திரா காட்டுக்கும், சிலரை கோலாப்பூர் அல்லது சோலாப்பூருக்கும் சாதனைகள் பயில அனுப்பினார்.

சிலருக்கோ தனது வழக்கமான ரூபத்தில் தோன்றினார். சிலருக்கு விழிப்பு நிலையிலோ, அல்லது கனவிலோ, இரவிலோ, பகலிலோ தோன்றி அவர்களது ஆசையைப் பூர்த்தி செய்தார். தனது அடியவர்களுக்கு பாபா உபதேசிக்க கையாண்ட எல்லா வழிகளையும் விவரிப்பதென்பது இயலாத காரியம். இக்குறிப்பிட்ட விசயத்தில் தாஸ்கணுவை விலேபார்லேக்கு அனுப்பி வேலைக்கார சிறுமியின் மூலம் அவரது சந்தேகத்தை தீர்த்தார்.

தாஸ்கணுவை அவ்வளவு தூரம் அனுப்பாமல் பாபா அவரது சந்தேகத்தை தீர்த்திருக்கலாம். ஆனால், ஏழைச்சிறுமியும், அவளது கிழிந்த கந்தல் உடையும், அவளது சமநிலையான மனமும் கடவுளால் வியாபிக்கப்பட்டுள்ளது என்னும் மிகப்பெரிய அனுபவத்தினை தாஸ்கணு எவ்வாறு கற்றிருக்க முடியும்.

ஆத்மாவினுள் அனைத்து சீவராசிகளையும், அனைத்து சீவராசிகளுக்குள்ளும் ஆத்மாவையும் காண்கின்றவன் எவ்வாறு மயக்க நிலைக்கு ஆட்படநேரும். வெறுப்புணர்வு, அறிவின் மயக்கம், ஆழ்ந்த மனத்துயரம், துக்கம், அனைத்தும் எவன் ஒருவன் தன்னை ஆன்மா என்று உணராமல் இருக்கின்றானோ அவனுக்கே ஏற்படும்.

ஆயினும் எவன் ஒருவன் அனைத்து உயிர்களிலும், பொருட்களிலும் ஏகத்துவத்தை உணர்கின்றானோ அவனே புற உலகப் பொருட்களாலும் உயிர்களாலும் ஒருபோதும் பாதிக் கப்படாமல் இறைத்தன்மையோடு இருப்பான்.

தொடரும்



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம்

6

ஐயனே! தயாநிதியே! கருணைக்கடலே! என்னுடைய குழப்பமான மனதின் சந்தேகங்களை நீங்களே தீர்த்து அருள வேண்டும். குருவின் அனுமதியின் பெயரில் அதனை வெளியிடுகின்றேன் என்று சிஷ்யன் ஸ்ரீகுருவின் பாதரவிந்தங்களை இறுகப்பற்றிக் கொண்டான். கருணைபொழியும் விழிகளால் சிஷ்யனைநோக்கி ஸ்ரீகுருதேவர், மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன், உன் சந்தேகங்களை கேள். அதற்கு நான் விளக்க மளிக்கின்றேன் என்றார்.

பலகாலமாக இந்த சம்சாரக் கடலில் முழுகியிருக்கின்ற எங்களை அவ்வளவு சீக்கிரமாக தங்களால் கரையேற்ற இயலுமா? தகிக்கும் அக்னிநட்சத்திரத்து கோடைப்பொழுதில் குளிர்ச்சி மிகுந்த பனிக்கட்டி எவ்வளவு நேரம் தாக்குபிடிக்க முடியும். விசாரமாகிய சிந்தைதெளிவு ஏற்படும்வரையில் ஒருவனுக்கு பயமென்பது ஒழியாது, மருந்துகள் உள்செல்கின்றவரையில் ஒருவனுக்கு எப்படி ஜன்னி, ஜுர உபாதைகள் இருக்குமோ அதுபோல சிந்தைதெளிந்து ஞானமானது உதயமாகுவரையில் இந்த மனக்கிலேசங்கள், பயம், நிம்மதியற்ற தன்மையானது நிலவும்.

மெய்ஞ்ஞானம் என்பது எல்லோருக்கும் சித்திக்கக்கூடியதா? எப்படி பெண்கழுதையானது தன் கால்களினால் மீண்டும் மீண்டும் உதைத்துக்கொண்டே இருந்தாலும் ஆண்கழுதையானது பின் தொடர்ந்து செல்லுமோ, அதுபோல இந்தமனித ஜென்மமானது சம்சாரக் கடலில் பலவிதமான துக்கங்களையும், துயரங்களையும் அனுபவித்தாலும் இதில் உழன்று அதிலே தான் சுகம்மென்று இருக்கின்றார்கள்.

சிந்தைதெளிந்த நிலையிலேயே ஒருவன் பரமசுகத்தை அடைகிறான் என்றும் சிந்தைதெளியாத நிலையிலேயே நாசமடைகிறார்கள் என்றும் கூறினீர்கள் அல்லவா, அது எப்படி சாத்தியமாகிறது?

சிந்தைதெளிவிற்கான சாதனம் தான் யாது? "எல்லாமே நீ உன்னுள் ளேயே உள்ளது காண்" என்றீர்களே அது எங்கு உள்ளது? எப்படிக் காண்பது? என்று வினவினான் சிஷ்யன்.

குருதேவர் மிக மகிழ்ந்து சிஷ்யனை நோக்கி, பின்வருமாறு கூறினார். மகனே! நீ பாக்கியவான்! இதுவரை நீ செய்த உபாசனைகளும், புண்ணியகருமங்களுமே உன்னை பரிசுத்தனாக்கி உயர்ந்த பதமான ஞானத்தை நோக்கி கேள்விகளை எழுப்பச்செய்தது. கருமம் என்று சொல்லப்படுகின்ற, காரியங் களை (செயல்களை) மேற்கொள் கின்ற விஷயத்தில் இந்த மானிட ஜென்ம மானது அலாதி பிரியம் கொண்டுள்ளது. இவர்களால் சும்மா இருப்பது என்பது இயலாத காரிய மாகவே உள்ளது.

இதில் பரிதாபம் என்னவென் றால் இதையெல்லாம் எதற்காக செய்கிறோம் என்ற புரிதல் கொஞ்சம் கூடயில்லாமல், இதனால் கிடைப் பதுதான் என்ன என்றறியாமல், உண்மையான சுகம் என்னவென்று தெரியாமல், அதற்கான முயற்சி களையும் சாதனங்களையும் விட்டுவிட்டு மோகத் தில் அடிக்கடி மயங்கு கின்றார்கள்.

"குருவிக்கூட்டை மட்டும்சுத்தசெய்வதால் குருவியை திருப்திப் படுத்தமுடியாது. அதுபோலவே, உறங்கும் ஆத்மாவின் தேவையை அறியாமல், உடலையும் மனதையும் திருப்திப்படுத்துவதால், நிலையான மகிழ்ச்சியை அடையமுடியாது".

நாயானது தெருவில் செல்லும் பொழுது ஒரு எலும்புத்துண்டை கண்டு, கடித்து சுவைக்கிறது. அந்த எலும்பானது வாயை கிழித்து இரத்தம் வருகிறது, இதனையறியாத நாயோ எலும்பிலிருந்து தான் இரத் தம் வருவதாக எண்ணி மீண்டும் மீண்டும் இதேபோல் செய்து இன்பத்தை அனுபவிப்பதாக எண் ணிக் கொள்கிறது. உண்மை யில் அந்த நாயானது தொடர்ச்சி யான துன்பத்தையே அனுப வித்துக்கொண்டிருக்கிறது, அது அதற்குத் தெரிவதில்லை, அதுபோலத்தான் மனிதனும் தொடர் செயல் சுழற்சியில் சிக்கித் தவிக்கிறான், அதன்மூலம் துன் பத்தையே அனுபவிக்கிறான்.

ஒருவன் சரியாக விசாரிக்காமல் மேற் கொள்ளும் எந்த செயலும் நன்மையில் முடியாது. விசாரணை யின் மூலமே தெளிந்த அறிவைப் பெற முடியும். விசாரித்து அறியாத வர்கள் அசுரர்கள், விசாரணை யுடையவர்களே தெய்வீக குணம் படைத்தவர்கள். ஞானிகள், சித்தர்கள், யோகிகள், ரிஷி முனிவர்கள் யாவரும் விசாரணையென்ற ஆயுதம் கொண்டே ஆத்ம ஞானத்தை அடைந்தனர்,



நாராயணன்

அதன்மூலமே அசுரகுணங்களை வென்றனர். சுகம் என்கின்ற மரத்திற்கு விசாரம் என்ற விதை மிக மிக அவசியமாகிறது.

விசாரம் மேற்கொள்கின்ற மனிதனே மேன்மை பெற்ற மனிதனாகிறான், அவன் அதை தொடர்ந்து கைவிடாதபோது அம்மனிதனே மாணிக்கத் திற்கு இணையான பெருமைதனை அடைகிறான், அவன் மிகவும் அனுக்கிரஹம் பெற்றவனாவான்.

ஆகவே, சுகத்தை விரும்பும் ஒருவனுக்கு மகத்தான சாதனம் ஒன்று உண்டென்றால் அது ஞானத்தை அடைவது மட்டுமே. சமையல் செய்வதற்கு பல்வேறு பொருள்கள் தேவைப்படுகின்றன. இதில் அரிசி, பருப்பு, காய்கறிகள், தண்ணீர், உப்பு போன்றவை சிலபொருள்களாகும், இதனை சமையல் செய்யத்தேவையான உபகரணங்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இதை வைத்தே சமையல் செய்து சாப்பிட முடியுமா என்றால், அதற்கான பதில் இல்லை என்பதே.

அப்படியானால், எது முக்கியமாக தேவை நெருப்பு, அக்னி, இதுதான் அடிப்படைத் தேவை. அதுபோல பூஜை, அபிஷேகம், ஆராதனை, யக்ஞகள் செய்தல், தானம் அளித்தல், நல்ல ஆன்மீக புத்தகங்களை படித்தல் இவையாவும் மனமாசுக்களை நீக்கி நம்மை தயார்படுத்தும். ஆனால், மோக்ஷசாதனம் ஆகுமா? நிலையான இன்பம் நல்குமா? என்றால் இல்லை. மோக்ஷமடைவதற்கும், நிலையான இன்பத்தில் லயிப்பதற்கும் அடிப்படைத் தேவை ஆத்ம ஞானம் அல்லது ஆன்மாவை பற்றிய அறிவு. இதுவே நேரடி சாதனமாகும் பரத்தை அறியும் விசாரமானது ஒருவனுக்கு உருவானால் தான் இந்த ஜென்மம் எடுத்ததற்கான பலன் முழுமைபெறும். விசாரமற்ற மனிதர்கள் யாவரும் கிணற்றுத்தவளைக்கு நிகரானவர்கள், ஏனென்றால் கிணற்றுத் தவளைகள் அந்த கிணறை தவிர வேறு எதையும் விசாரித்து அறிவதில்லை. அந்த கிணற்றிலேயே உற்பத்தியாகி, அங்கேயே வாழ்ந்து பின்பு மடிகின்றது. அதுபோல மனிதன் எது உண்மையான இன்பம், எது துக்கம் என்று ஆராய்ந்தறியாமல், மீண்டும் மீண்டும் இந்த உலக வாழ்க்கை தேவை மட்டுமே இன்பம் என்று நம்பி வாழ்ந்து, பின்பு மடிந்து, மீண்டும் பிறந்து இப்படியே நாசத்தை அடைகின்றான்.

இவ்வாறு குருவானவர் கருணையோடு தன் சிஷ்யனை நோக்கி, "நீ விசாரமார்க்கத்தில் வந்ததினால் மிகவும் பாக்கியசாலி, இதுவே ஞானம் அடைவதற்கான முதற்படியாகும்". ஞானமானது எல்லோராலும் அடையக்கூடியதா? என்றும் எப்படி அதை அடைவது? அதன் மார்க்கம் தான் என்ன? என மிகஅழகாக கேள்விதனை கேட்டாய். முதலில் அந்த பரம சுகத்தையடைய சாதுக்களின் சங்கமம் அவசியமாகிறது, அதுமட்டுமே துக்கங்களை நாசம் செய்யக்கூடிய உபாயமாகும்.

நீ மெய்ஞ்ஞானம் அடைய வேண்டுமானால் சாதுக்களின் சங்கமானது மிகவும் முக்கியம், மனம் பக்குவமடைய ஞானிகளாகிய சாதுக்களின் சங்கம் வேண்டும். தேவையான இலக்கை நோக்கி ஓடாமல் எங்கெங்கோ அலைந்துதிரியும் இம்மனதிற்கு

ஒருகடிவாளம் தான் ஞானிகளின் சங்கம். கடிவாளம் கட்டியமனம் ஒரே இலக்கான அமைதியை நோக்கித் தன் பயணத்தை துவங்கும், ஏனென்றால் ஞானிகள்தான் சத்தியவழியை காட்டு வார்கள், அதுவே உத்தமம். அவனவன் எப்படிப்பட்ட சங்கத்தை அடைகின்றானோ அதற்கேற்றாற்போல பலன்களையும் அடை கிறான் என்பதில் சிறிதும் சந்தேகம் என்பது கிடையாது.

உனக்கு நன்கு புரியும் படியாக ஞானகாண்டம் என்றழைக்கப்படும் "திரிபுரா ரஹஸ்யதிலிருந்து" ஒரு சிறுகதையின் மூலமாக இவ் வுலகப் பொருட்களின் நிலையற்ற தன்மை, இந்திரிய நிக்கிரஹம் (அடக்கித்தள்ளுதல்), சாதுசங்கத் தின் தேவையை, ஞானத்தின் மஹிமையை, தியானத்தின் பெருமையைப்பற்றி விளக்குகிறேன், மிகவும் கவனத்தோடு கேட்பாயாக!

இந்த அற்புதமான திரிபுரா ரஹஸ்யம் என்பது, ஆதிகுரு ஸ்ரீ தத்தாத்ரேயர் தனது சிஷ்யனான பரசுராமன் என்பவருக்கு உபதேசிப் பதாக அமையப்பெற்றது. அமைதி யற்று சுற்றிக்கொண்டிருந்த பரசுராமனுக்கு ஸ்ரீதத்தர் இவ்வுலகப் பொருள்களின் மீதுள்ள பற்றை துறப்பதையும், இந்திரியசுகங்களை விலக்குவதையும், சத்சங்கத்தின் தேவையையும், ஞானத்தின் அருமையையும், தியானத்தின் பெருமையையும் விளக்கி இறுதியில் ஞானமடைந்து பரசுராமன் நிலையான இன்பத்தையடைந்து அமைதிபெற்றான் என்பதனை எடுத்து இயம்புகின்றது. எனவே கதையை கவனமாக கேட்பாயாக!

தொடரும்

பக்குவம்

அறிவு தான் மிகவும் முக்கிய மானது! அதுதான் நம்மை துன்பப் படாமலும் ஏக்கப்படாமலும், எதிர்பார்க்காத மனநிலையிலும் வைத்திருக்கிறது! விவேகத்தோடு கூடிய அறிவே மனித இனம் சம்பாதிக்க வேண்டியது. அறிவா? அன்பா? எது முதலில் தேவை என்றால் அறிவு தான். ஏனெனில் தெளிந்த அறிவு இருந்தால் மட்டுமே பிறரை அன்பு செலுத்த இயலும்!

இல்லை எனில் வெறும் சுயநலப் பற்றே பந்த பாசமாக மாறி இதயத்தில் பாசி படியும்! அந்தப் பாசியால் தான் மனம் வழுக்கி துன்பச் சேற்றிலும் விழுந்து தொலைக்கிறது! இதில் இருந்து நாம் தப்பிக்க வேண்டுமானால் யோகம் பயில வேண்டும் யோகம் பயின்றால் மன மாசு அகலும். யோகப் பயிற்சி இடைவிடாமல் நாம் புரிய வேண்டும்!



எங்கள் வாழ்வை பகவான் பாபா மாற்றுவார் என்று பகல் கனவு கண்டால் எந்த நன்மையும் இல்லை! சாயி அருளோடு முயற்சியும் தேவை! ஏனென்றால் நமக்கு புத்தி தருவதே பாபா தான்! வெறும் பணம் சம்பாதிக்க மட்டும் புத்தியை பயன் படுத்தினால் அதற்கான பின்விளைவு களையும் நாம் தான் அனுபவிப்போம் பாபா அல்ல! பெரியவனாவதற்கான லட்சணம் வயதாவதோ பணம் சேர்த்து வைத்திருப்பதோ அல்ல, பக்குவம் அடைவதே!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.08.25

குழம்பித்தவிக்கும் உங்கள் மனதிடம் இருந்து விடுதலை அடைவதே உண்மையான சுதந்திரம்.

02.08.25

நாம் அமரும் இடத்தை சுத்தமாக வைக்க எவ்வளவு முயற்சி எடுக்கின்றோம். ஆனால் இறைவன் அமர நினைக்கும் இடத்தை சுத்தமாக வைத்திருக்கின்றோமா? அன்பு என்னும் நீரைப் பயன்படுத்தி யோகம் தியானம் என்ற அழுக்கு நீக்கியால் இதயத்தை சுத்தப்படுத்துங்கள்.

03.08.25

ஆணவமும், பொறாமையும் நிரம்பிய ஒருவரை திருத்த இறைவன் எந்த வடிவிலும் வருவார் என்று ஒருவராலும் கனிக்க முடியாது. எந்த வடிவத்திலும், எந்த நேரத்திலும் வரலாம். எனவே ஆணவம் பொறாமை நீக்கி, தன்னலமற்ற அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

04.08.25

இந்த நிமிடத்தில் இருந்து கவலைப்படாதீர்கள். இந்த நிமிடத்தில் இருந்து கோபப் படாதீர்கள். இந்த நிமிடத்தில் இருந்து நேர்மையாக இருங்கள். இந்த நிமிடத்தில் இருந்து உங்களது நன்றியுணர்வை வெளிப் படுத்துங்கள்.

05.08.25

பாதைகள் நீண்டதும், அபாயங்கள் நிறைந்ததுமாகும். ஆயினும் போராடத்தான் வேண்டும். மனம் தளராதீர்கள், எழுந்திருங்கள், விழித்திருங்கள், குறிக்கோளை அடையும் வரை முயற்சியை நிறுத்தாதீர்கள்.

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

06.08.25

ஓடுவதை முதலில் நிறுத்துங்கள். ஓடிக்கொண்டே இருக்கும்போது எதையும் தேட முடியாது. ஓரிடத்தில் நின்றால் தான் தேடுவது என்னவென்று புரியும். ஒருவேளை நீங்கள் தேடுவது நீங்களாகவே கூட இருக்கலாம்.

07.08.25

எல்லாவற்றுக்கும் சந்தேகப் படுத்துவது அடுத்தவரை துச்ச மென நினைத்து அவமானப் படுத்துவது தான் என்ற அகங்காரம் கொண்டவர்கள் ஒருபோதும் ஆன்மீக முன்னேற்றம் காண மாட்டார்கள்.

08.08 25

நீங்கள் கண்ணால் காண்பதைக் கண்டு ஏமாறாதீர்கள். நீங்கள் கண்ணால் கண்டதைவிட கண்ணால் காணாதது அதிக சிற்புடையது. வாயால் பேசி எச்சில்படுத்திய சொற்களைவிட, பேசாத சொற்கள் எச்சில்படாதவை. எனவே மௌனம் பழகுங்கள்.

09.08.25

இந்த வாழ்க்கை இறைவன் எழுதிய மிகச்சிறந்த நாவல். இதை மனிதன் தன் புத்தியினால் மட்டும் புரிந்துகொள்ள முயற்சித்தால் பைத்தியம் பிடித்து விடும். எனவே தியானத்தின் மூலம் உங்களுடைய உள்ளுணர்வை விரிவு படுத்துங்கள். அப்போதுதான் நீங்கள் வாழ்க்கை என்ற பாடத்தை புரிந்து கொள்ள முடியும்.

10.08.25

குருவின் அனுக்கிரகம் இருந்தால் உங்களது சயநலம் சார்ந்த தேவைகள் யாவும் நிறைவேறும். எனவே ஒவ்வொரு நொடியும் குருவிற்கு சேவை செய்யுங்கள். அதைத்தவிர இந்த உலகில் புனிதமானது வேறு எதுவும் இருக்க முடியாது.

11.08.25

ஆன்மீக சாதனை செய்யும் ஒருவனுக்கு உலகியல் விசயங் களைப் பற்றிய அனாவசிய பேச்சுக்கள் பேச நேரம் இருக்காது. அவனது எண்ணம் முழுவதும் இறையையே பற்றியிருக்கும். பிறரின் குற்றம் குறைகளை காணவும், பேசவும் செய்பவன் ஆன்மீக சாதனையில் ஒருபோதும் முன்னேறுவதில்லை.

12.08.25

வாழ்க்கையின் உண்மையான சம்பவம் மரணம் மட்டுமே! அது எங்கே, எப்போது, எப்படி நடக்க வேண்டும் என்று நிர்மாணிப்பது நமது எண்ணங்களே! எனவே எண்ணங்களை சீர்படுத்துங்கள்.

13.08.25

நமக்கு தெரியாத ஒன்றை தெரியாது என்று ஒத்துக்கொள்வது அசிங்கமல்ல அறிவு. அதை முயற்சி செய்து அறிந்து கொள்வதே மெய்யறிவு.

14.08.25

உண்மை என்று ஒன்று

இருந்தால் அதை தேட முடியாது. அறிந்து கொள்ளலாம். அறிவதே அறிவு. அதை உணர்ந்து கொண்டால் ஞானம்.

15.08.25

குளிர் பிரதேசத்தில் வசிப்பவனுக்கும், வெப்ப மண்டலத்தில் வசிப்பவனுக்கும் கர்மா ஒன்றே! குளிர் பிரதேசத்தில் வசிப்பவன் வெப்ப மண்டலத்தில் வசிக்கலாம், என்றும் வெப்ப மண்டலத்தில் வசிப்பவன் குளிர் பிரதேசத்தில் வாழலாம் என்று வருத்தப்படாமல் இருந்தால் கர்மாவில் இருந்து தப்பிக்கலாம்.

16.08.25

சாதாரண உலக அறிவை கற்பதற்கே நிறைய காலங்களை செலவழிக்க வேண்டி இருக்கின்றது. இறைவனைப்பற்றிய அறிவை பெறுவதற்கு எவ்வளவு மணி நேரம், எத்தனை தேர்வுகளை சந்தித்து நம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

17.08.25

தான் செய்யும் காரியங்களுக்கு எல்லாம் தனக்குத்தானே சுய உரிமையுடையவன் என் னும் கண்மூடித்தனமான அகம்பாவத் திற்கு ஆளாகாதபடி விழிப்புடன் இருக்க வேண்டும்.

18.08.25

பொறுமையைவிட மேலான தவமும் இல்லை. திருப்தியைவிட மேலான இன்பமும் இல்லை. இரக்கத்தை விட உயர்ந்த அறமும் இல்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை.

19.08.25

அமைதியான வாழ்விற்கு இரண்டு வழிகள் உண்டு. சக மனிதர் ஒருவரை நீங்கள் வேதனைப்படுத்திவிட்டால், முதலில் மன்னிப்பு கேட்பது நீயாக இருக்க வேண்டும். அப்படி ஒரு மனிதர் உன்னை வேதனைப்படுத்தி விட்டால் முதலில் மன்னிப்பது நீயாகவே இருக்க வேண்டும்.

20.08.25

நான் என்ற ஆணவமும், பெருமையும் வளர்ந்தால் ஆசைகள் தோன்றும். அதுவே பற்றாக மாறும். பற்றிலிருந்து பந்தங்கள் வளர்ந்து விடும். பந்தங்கள் அதிகரித்தால் குருவை அறிய முடியாத அளவிற்கு கவனம் சிதறிவிடும்.

21.08.25

எப்போது உன்னிடம் மனித இயல்புகளான அன்பும் தியாகமும் பணிவும் வெளிப்படுகின்றதோ, அப்போதுதான் இறைவன் உன்னுடனும், உனக்குள்ளும், உன்னைச் சுற்றிலும் உனக்கு முன்னும் பின்னும், மேலும் கீழும், வழிகாட்டியபடி இருப்பார்.

22.08.25

எப்போதும் நீங்கள் தனியாக சிந்திக்காதீர்கள். நானே இறைவனின் சொரூபம் என்ற உறுதியோடு சிந்தியுங்கள். எவ்வாறு தீய சிந்தனைகளும், தன்னிரக்கமும்,

கோபமும், பொறாமையும் வரும்.

23.08.25

நீ உன்னை கவனியாது உலகை கவனிக்க கவனிக்க கோபம் வரும். உலகை விட்டுவிட்டு உன்னை கவனி. கோபம் விலகும்.

24.08.25

குருவிற்கு சேவை செய்கின்ற வாய்ப்பு கிட்டும்போது நான் செய்கின்றேன் என்ற எண்ணம் இல்லாமல் செய்வதே தியானமாகும்.

25.08.25

அழகும் மகிழ்ச்சியும் இவ்வுலகத்தில் நிரந்தரமானதல்ல. உறவும், நட்பும் விரைவில் கடந்து போகும் மேகம் போன்றது. எனவே மகழ்ச்சியின் வடிவமாக இருக்கும் கடவுளிடம் சரண் அடைந்து விடுங்கள்.

26.08.25

உடல் எப்படி உயிர் இல்லாமல் இருக்க முடியாதோ அதுபோலவே ஆன்மாவும் அன்பில்லாமல் இருக்க முடியாது. அன்பே ஆன்மீகத்தின் வாசல். எனவே அன்போடு இருங்கள்.

27.08.25

எல்லாம் இறைவனின் செயல். மனிதன் என்பவன் இறைவனின் கையில் இருக்கும் ஒரு கருவி. இறைவன் அதை இயக்குபவன். இறைவன் எதைச் செய்ய வைக்கின்றானோ அதைத்தான் மனிதன் செய்கின்றான் என்று உணர்பவனே ஞானி.

28.08.25

வாழ்க்கையில் வசதிகளும், செல்வமும் வரும் போகும். ஆனால் அவை நிலைத்திருக்கும் என்று நம்பி வாழ்க்கையை வீணடித்துவிடக் கூடாது. இவ்வுலக உயிரினங்களுக்கு நம்மால் முடிந்த சேவைகளை செய்வதே நிலையான அமைதியைத் தரும் என்பதை உணர வேண்டும்.

29.08.25

ஆக்க சிந்தனையோடு வாழுங்கள். எதையும் எதிர்மறையாக சிந்தித்து வாழாதீர்கள். ஆக்க சிந்தனை ஊக்கத்தையும், உயர்வையும் வளர்க்கும். பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். சந்தோசமாக வாழ முயற்சிக்காதீர்கள். நிம்மதியாக வாழ முயற்சி செய்யுங்கள்.

30.08.25

புளிப்பு, கசப்பின்றி இனிமையாக இருக்கும் கனிகளையே நாம் இறைவனுக்கு படைக்க விரும்புகின்றோம். ஆனால் இறைவனோ புளிப்பு கசப்பின்றி உள்ள தூய்மையான எண்ணங்கள் கொண்ட மனதினையே விரும்புகின்றார்.

31.08.25

இறைவனை புராணத்திற்குள் அடக்கி ஊர்ஊராக தேடாதீர். அவனை ஆன்மீக அனுபவமாக மாற்றி உங்களுக்குள் தேடுங்கள். அவன் அங்கு உங்களுக்காக காத்துக்கொண்டிருக்கின்றான். ●

நமது அன்பிற்கினிய சாய் சொந்தங்களுக்கு வணக்கத்துடன் சுந்தர் சாய், திருவருள் தேடி தொடரில் நமக்கு கிடைத்த ஆன்மீக அனுபவங்களை தொடர்ந்து பகிர்வதில் மகிழ்ச்சி. இந்த அனுபவ பகிர்வுக்கு சத்குரு சாய் மகராஜ் ஆசியுடன் நமக்கு மேடை அமைத்துக் கொடுத்து வாசகர் வட்டத்தையும் உருவாக்கிக் கொடுத்திருக்கும் "சாய் மகராஜ் குருவைத் தேடி" யின் ஆசிரியர், நண்பர் திரு. ஸ்ரீராம் பாபாவிற்கும் எனது நன்றி கலந்த நமஸ்காரங்கள்.



தொடர் - 28

திருவருள் தேடி

இந்த அக்டோபர் மாத இதழ் தங்கள் கைகளை அடைந்திருக்கும் நேரம், சென்ற இதழில் விவரித்தபடி ஷீரடி சாய் பாபாவின் பிறந்த நாள், 27 செப்டம்பர் மற்றும் மஹாசமாதி அடைந்த விஜயதசமி கொண்டாட்டங்களும் இனிதே நிறைவேறி இருக்கும். நாம் பாராயணம், சத்சங்கம், நாம ஜெபம் என நமது ஆன்மீக பணியை தொடங்கிய நாட்களில் நமக்கு கிட்டிய சில அற்புத அனுபவங்கள் நமக்கு அந்த நாட்களில் பெரும் ஆச்சரியத்தை தர ஆரம்பித்தது. எனது 40 ஆண்டுகால நண்பர், வைணவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை உடைய திரு.ராஜ கோபாலன். அவர்களை சுமார் 16 ஆண்டுகள் நாம் சென்னையை விட்டுச் சென்று திரும்பியபின் மீண்டும் பலமுறை சந்தித்து நெருங்கிப் பழக வாய்ப்பு கிட்டியது.

அவரது மாமனாரும் எனக்கு நெருங்கிய பழக்கமானவர். இந்த குறுகிய 16 வருடங்களில், மாமனாரும் அவரது மனைவியும் இயற்கை எய்தவே, திரு. ராஜகோபாலன் அவர் ஒரே மகன், மாமியார் என குடும்பம் மிக நெருங்கிய நட்பாக தொடர்ந்தது. அவருக்கும் ஷீரடி பாபாவின் மீது ஆழ்ந்த பக்தி மலர, நம்மை கருவியாக அமைத்து அவர் வாழ்வில் பாபா பல அற்புதங்களை நிகழ்த்தி எங்கள் தொடர்பை ஆத்மார்த்தமான நட்பாகவும் அவர்கள் குடும்பத்தில் நெருக்கத்தையும் ஏற்படுத்தி இன்றளவும் அது தொடர லீலைகள் பல புரிந்து கொண்டிருக்கிறார்.

ஆம் அவரது மகன் பெங்களூரில் ஓர் சிறிய வேலையிலிருந்த சமயம் அது. தனியாக தங்கி விடுதியில் உணவு உட்கொண்டு சுமாரான வருமானத்துடன் இருந்தார். ஓர் நாள் அவர்களுடன் குடும்ப விஷயங் களை பற்றி பேசிக் கொண்டிருந்த நேரம், என்னையறியாமலே, "நேரம் கூடி வருகிறது. உங்கள் மகன் வேறு வேலை கிடைத்து உங்களுடன் வந்து சேர்ந்து விடுவார், கவலைப் பட வேண்டாம். பாபா பார்த்துக் கொள்வார்" என ஓர் நல்வாக்காக ஆறுதல் கூறிவிட்டு வந்துவிட்டேன்.

ஒரே வாரத்தில் அவர் மகனுக்கு சென்னையிலிருந்து ஓர் ஐ.டி. கம்பெனியிலிருந்து இன்டர்வியூ வந்திருக்கிறதென்றும், நீங்கள் சொன்னபடி அமைகிறது, இது நல்ல கம்பெனி, இதில் தேர்ச்சி பெற்று வேலை மாற வேண்டுமே என கவலையுடன் பேசினார். நான் அவரிடம் இது பாபாவின் ஆசிர்வாதம் எனவே நீங்கள் ஒரு மட்டைத் தேங்காய் வாங்கி, மஞ் சள் கலந்த நீரால் சுத்தம் செய்து, சந்தன குங்குமம் இட்டு வழிபாடு செய்து, மயிலாப்பூரிலுள்ள பாபா கோவில் துனியில் அதை சேர்த்து விடுங்கள். மற்றதை பாபா பார்த்துக் கொள்வார் என்று ஆறுதல் கூறினேன்.



சுந்தர் சாய்
9789404451

நான்கு நாட்கள் சென்று எனது நண்பர் போன் செய்து தன் மகன் இன்டர்வியூவில் கலந்து கொண்டு பதில் எதுவும் வராததால் நேற்று பெங்களூர் சென்றுவிட்டார் என்று ஓர் ஏமாற்றத்துடன் பேசினார். நான் தேங்காய் விவரம் கேட்டவுடன் அவரும் சொன்னதுபோல் வீட்டில் வாங்கி வைத்து பூஜை செய்த விவரம் கூற, நான் எங்கே அந்த தேங்காய் என்றபோது தான் அதை துனியில் சேர்க்க மறந்துவிட்டதை அவர் உணர்ந்து உடனே அதை நிறைவேற்ற மயிலாப்பூர் செல்கிறேன் என்று முடித்தார்.

மீண்டும் அன்று மாலை 5 மணிக்கு தொடர்பு கொண்டு, மதியம் மயிலாப்பூர் சென்று தேங் காயை பாபா துனியில் சேர்த்து விட்டு திரும்பிய உடனேயே பெங்களூரிலிருந்து அந்த மகிழ்வான செய்தியை அவரது மகன் தெரிவித்து தற்பொழுதுதான் இ.மெயிலில் வேலைக்கான ஆர்டர் கிட்டியது என்று பகிரந்து கொண்டார். சாய் வாக்கு சத்ய வாக்கு என அவருக்கு உணர்த்தி நமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டோம்.

பின்பு தான் நமக்கு ஓர் அரிய, மிகப்பெரிய அனுபவமாக

பாபாவின் மீது நம்பிக்கை முழுமையாக வைத்து அடைக்கலம் தேடினால், ஏதோ ஓர் ரூபத்தில் பாபா நம்முடன் தொடர்பிலிருந்து நமது நம்பிக்கையை உண்மை யாக்குவார் என்பது உறுதியானது. ஏனென்றால் இது எங்கள் நட்பில், பாபா நிகழ்த்த தொடங்கிய அற்புதங்களில் ஆரம்ப கட்டமே என்பது பின்பு படிப்படியாக அவர்கள் வாழ்வில் நடந்த எல்லா நிகழ்வுகளும் எங்கள் இருவருக்குமே ஏற்பட்ட அனுபவம். அன்று முதல் எவ்வளவோ சிறியது முதல் முக்கியமான வாழ்வின் திருப்பு முனைகள் எல்லாவற்றிலுமே நம்மை கருவியாக்கி பாபா கொடுக் கும் ஒவ்வொரு நல்வாக்கும், திருவாக் காய் அமைந்து அசத்தினார்.

ஷீரடி சாயியின் அளவற்ற கருணையை அனுபவிக்க கிடைத்த வாய்ப்புகள் ஏராளம். ஆனால் ஒரு பக்தரின் வாழ்விலேயே படிப் படியாக இப்படிக்கூட நடக்குமா என ஆச்சரியப்பட வைத்தது நம் வாழ்விலும் பாபாவின் மீதான பக்தி, அன்பு, நம்பிக்கை என எப்படி அழைத்தாலும் உறுதிப்பட்ட அனுபவங்களே. எனது நண்பரின் மகன் சென்னைக்கு வந்து வேலையில் சேர்ந்து 6 மாதங்கள் ஆன உடனேயே என் நண்பர் பைய னுக்கு வரன் பார்க்க ஆரம்பித்து விட்டார்.

ஓர் வியாழன் காலையில் எனக்கு போன் செய்து விசயத்தை கூறும் பொழுது பாபாவின் வாக்கு – "வரன் தேடி அலைய வேண்டாம். அவரைத் தேடி ஓர் அற்புதமான வரன் வரும், வீண் அலைச்சல் தேவையில்லை". இதற்கு மேல் விவரம் எதுவுமில்லை. வழக்கம் போல இதை நாம் எப்படி முழுமையாக ஏற்றுக் கொள்வது. அதுவும் மணப்பெண் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கும் இக்காலத்தில்?

பாபாவால் குதிரையையே காண்பித்துக் கொடுக்க முடிந்ததே, சாந்த் பாட்டீலுக்கு கொம்பு பெரிய விஷயமா என்ன? அதுவும் நிகழ்ந்தது நம் நண்பரின் வாழ்வில். ஆம் ஓரிரு வாரங்களில் மி.நி.வி. கம்பெனியில் வேலை செய்யும் இன்ஜினியர் வரன் ஒன்று மிக உயர்ந்த (ஆன்மீகத்தில்) குடும்பத்தி லிருந்து அழைப்பாக வந்தது. முதலில் எமது நண்பர் தயங்கினார்

நான் முன்னடி எடுத்து வைத்து வேலையை மும்முரப்படுத்தி இது பாபாவின் வாக்கு, நாம் வீணடிக்க கூடாது என அவரது மகனுடன் வரன் பார்க்க, சென்றோம். பெண் பார்த்து சம்பந்தம் பேசி தொடங்கி திருமண வேலை விறுவிறுப்புடன் சுற்றத்தோர் எல்லாம் ஆச்சர்யமாக பார்க்கும் வகையில் கட கடவென எக்ஸ்பிரஸ் ரயில் வேகத்தில் திருமணம் நடந்தேறியது. நமக்கு "பிள்ளை வீட்டு மாமா" ரோல். சகல மரியாதையுடன் ஆனந்த அனுபவம் சாய் மகராஜ் அற்புதம்!!

உடனே பாபா நமக்கு உணர்த் தியது ஒரே வருடத்தில் "சத் சந்தான பாக்யம்" அதையும் நிகழ்த்தி காட்டி அதிசயக்க வைத்ததுடன், குழந்தைக்கான நாமகரணம் பெயரின் பகுதியையும் நமக்குணர்த்தி, பிறக்கும் முன்பே ஓர் பிரதோஷ காலத்தில் லஷ்மி நரசிம்மர் சன்னதியில் நமது



நண்பருக்கு நம்மூலம் பாபா தெரியப்படுத்தினார். இது எங்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். பின்பு குழந்தை பிறந்து அதற்கு இட்ட பெயரில் முதல் பகுதி பாபா சொன்னபடியே!

அதன்பின் எனது நண்பர் மகனுக்கு கிடைக்க வேண்டிய இரண்டாவது வேலை மாற்றம், எந்த ஊர் என எல்லாமே பாபா வாக்குப்படி நடந்ததுடன், நாமே அழைத்துக் கொண்டு போய் வீடு பார்த்து, வேலையில் சேர முதல் நாள் உடன் சென்று எல்லாமே தடையின்றி அமைத்துக் கொடுத்து, சகலம் சாய், சர்வம் சாய், சதா சாய் என ஆணித்தரமாக ஆசிர்வாதம் செய்த பாபாவின் லீலை மறக்க முடியாத அனுபவம்.

இதற்குப் பிறகும் கூட அவரது வாழ்வில் கிடைத்த பல ஏற்றங்களையும் பாபாவின் வாக்கால் கூறப்பட்டபடியே புது வீடு வாங்கியது, குடியிருப்பின் பெயரிலேயே "சாய்" என்று இருந்தது, ஏற்கனவே குடியிருந்த வீட்டையும் புதுபித்து கிரகப்பிரவேசம் செய்யும் நேரம் வேறு நல்ல மாற்றத்துடன் வேலை கிடைப்பது, இரண்டாவது ஆண் குழந்தை என எல்லாம் நூற்றுக்கு நூறு பாபா கூறியபடியே நடந்தேறியது. அதற்கு பாபா தேர்ந்தெடுத்த மீடியமாக நம்மை உபயோகித்து நம்மை உயர்த்தி லீலைகள் புரிந்த ஷீரடி சாயியின் கருணையே கருணை.

அதே போன்று ஷீரடியில் நானும் என் நண்பரும் தரிசனத்துக்கு சென்ற பொழுது சீனியர் சிட்டிசன் பாஸ் வாங்கி செல்ல ஒரு செக்யூரிட்டி ஆலோசனை யளித்தார். எனக்கு 59 வயதே ஆனதால் பாஸ் மறுக்கப்பட்டு நாங்கள் பொதுவழியில் செல்லத் துவங்க, எனது நண்பர் ஒரு சிறு குழாயில் தடுக்கி விழ இருந்த நேரத்தில் மற்றொரு செக்யூரிட்டி எங்களைப் பிடித்து வி.ஐ.பி. தரிசனத்தில் அனுப்பி பாபா ஆச்சரியப்படுத்தினார். கவுண்டரில் பாஸ் கொடுக்கவில்லை என்றாலும் பாபா எங்களை வி.ஐ.பி. தரிசனத்தில் அழைத்தார்.

இவ்வாறே சாய் தர்பாரில் நிகழ்த் தப்படும் லீலைகள் ஒவ்வொன்றும் தினசரி நிகழ்வுகளாய் மாறி எங்கு சென்றாலும் நான் உங்கள் உடன் வருகிறேன் என்ற பாபாவின் வாக்கு பரம சத்யமான அனுபவ மாய் மாறியது. நம்பினோர்க்கு நாராயணன் என்ற பழமொழிக்கேற்ப நாம் முழுமையான பாபாவிடம் என் வாழ்க்கையை ஒப்படைத்த பின் குருவருளின் அரவணைப்பில் திகைக்க வைக்கும் பற்பல அனுபவங்கள். நமக்கென எந்த

எதிர்பார்ப்பும் தேவையில்லை, எல்லாவற்றையும் பாபா கவனித்துக் கொள்வார் என்ற அறிய பாடத்தை நமக்கு வாழ்க்கைப் பாடமாய் நடத்தி காட்டுகிறார் சாய்ராம்.

ஒரு புத்தாண்டு தினத்தில் நமக்கு அவர்கள் குடும்பத்தில் இருந்து அழைப்பு. நாம் அனைவரும் சேர்ந்து ஷீரடி சென்று தரிசனம் செய்து வரலாம் என ஜனவரி 1 ஆம் தேதி சொல்ல, நான் இவ்வளவு குறுகிய நாட்களில் எப்படி டிக்கெட் கிடைக்கும், இது விடுமுறைக் காலமாயிற்றே என்று தயங்கியப் பின், சரி முயற்சி செய்யுங்கள். பாபா விரும்பினால் எல்லாம் நடக்கும் என்றேன். ஆனால் என்னை விட முழு ஆர்வமாக அவர்கள் குடும்பத்திலிருந்து 4 பேர் மற்றும் நான் என ஐந்து பேருக்கு விமான டிக்கெட் வாங்க திட்டமிட்டு மறுநாளே புறப்பட்டோம். சாய் அழைத்தால், எல்லா ஏற்பாட்டையும் அவரே செய்து விடுகிறார் என்பது திரும்பத் திரும்ப பல சந்தர்ப்பங்களில் நமக்கு உணர்த்தப்பட்ட அதே அனுபவத்தில் இந்த நிகழ்வும் ஒன்று.

அத்தோடு நம் வாழ்வில் ஓர் முக்கியமான திருப்புமுனை இந்த பயணத்தில் ஏற்பட்டு நம்மை தெளிவடையச் செய்தது. இந்த அனுபவத்தைப் பற்றி வரும் நவம்பர் மாத இதழில் அறிந்து கொள்வோம். குரு வாழ்க! குருவே துணை!! சதா, சர்வம் சகலம் சாய் என்றுணர்ந்து சத்குருவின் பாதம் பணிந்து போற்றுவோம்.

மீண்டும் தொடர்வோம்

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!


சாயி சொந்தங்கள்
அனைவருக்கும் இனிய
“தீப ஒளி”த் திருநாள்
வாழ்த்துக்கள்

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
தியான வகுப்புகள்:

யோகி ஸ்ரீராம் பாபாவின் நேரடி பயிற்சி

"மௌனத்தின் மூலம் தவம்"

8 வார வகுப்புகள்

7 வாரம் ஆன்லைன் வகுப்புகள். 8 வது வாரம்
"மௌனத்தின் மூலம் தவம்" ஒரு நாள் பயிற்சி நடைபெறும்
* பயிற்சியாளர்கள் கண்டிப்பாக நேரில் வந்து கலந்து கொள்ள வேண்டும் *

நேரம் :
பிரதி ஞாயிறு மாலை 6–7.30 வரை.
மௌன தினத்தன்று
குண்டலினி தீட்சை கொடுக்கப்படும்.
கட்டணம் – ₹ 3500/-

- பிராணாயாமம்,
- யோகாசனங்கள்,
- கிரியா விளக்கங்கள்,
- தியானம்,
- ஆத்மஞானம்,
- குண்டலினி யோகம்.



கலியுகத்தில் அனைத்தும் சுலபமாகக் கிடைக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு.

குருவும் பயிற்சியும் உங்கள் உள்ளங் கையில் கிடைக்கிறது. தூரமாக இருக்கிறேனே என்று ஏங்க வேண்டாம். உங்களுக்காக ஆன்லைன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

நேரிலும் வந்து பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு;
திருமதி. மாதங்கி பாலாஜி,
போன்: 9942219947

குரு வாழ்க! குருவே துணை! ஞான ஒளி திக்கெட்டும் பரவட்டும்!


சலசலக்கும் ஆற்றில்
சருகாய் ஒரு பயணம்!
பாதையெல்லாம் முட்கள் -
தைத்தபோதெல்லாம்
தைலத்தோடு ஓடி வந்த
குருமார்கள்!
பாதாளத்தில் விழுந்தால் கூட
எழுந்து நிற்கும்
ஆன்மீக ஆசிகள்!
முருகன் அருணகிரிக்கு
சொன்னதை ஸ்ரீராமிடம்
சாய்ராம் சொன்னார்
'சும்மாயிரு!'.
அனுமன் போல்
நெஞ்சைப் பிளந்ததொரு
அனுபவம்
குருவைத் தேடி!






நீங்கள் வாழ்வில் வந்தது
நாங்களும்
பாக்கியவான்கள்
என்று பறை சாற்றவே!
நன்றிகள் குருவே!

திரு. அருணாச்சலம் வைத்யநாதன்
அச்சமுண்டு அச்சமுண்டு, நிபுணன்,
பெருச்சாழி, கல்யாண சமையல் சாதம்,
சா பூ திரி, திரைப்பட இயக்குனர்.



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.
"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

திருவண்ணாமலை யோகி இராம்சுரத்குமார் அவர்கள், தான் ஒரு அலை என்றால் கசவனம்பட்டி மகான் ஒரு "கடல்" என்றும், திருக்கோயிலூர் ஞானானந்தகிரி சுவாமிகளால் "துருவநட்சத்திரம்" என்றும், ஜமீன் புரவிப்பாளையம் கோடி சுவாமிகளால் "மகான்களுக்கெல்லாம் மகான்" என்றும் போற்றப்பட்டவர் நம் "கசவனம்பட்டி சுவாமிகள்".

கசவனம்பட்டி சுவாமிகள்



சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்பு ஊருக்குக் கிழக்கே குட்டத்து ஆவரம்பட்டிக்காட்டில் பிறவிக்கோலத்துடன் வேலிகளிலுள்ள பச்சை இலைகளை உண்ணும் நிலையுடன், பத்துப் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க வயதில் பித்தனைப்போல், பால் முகத்துடன், மாநிறத்துடன், மெலிந்த மேனியாய். நீண்ட கைகள், அழகிய பாதங்கள், சிவந்த கண்களுடன், தெளிந்த ஞானத்தோடு, படிப்பறிவில்லாத சாதாரண மனிதன் போல் சுற்றித் திரிந்து கொண்டு இருந்திருக்கிறார்.

அது சமயம் இவ்வூர் வேளாண்மைப் பெருமக்கள் ஆடு, மாடு மேய்ப்பதற்கு அப்பகுதிக்குச் செல்வது வழக்கம். இதில் ஒரு சிலர் பயபக்தியுடன் சிறுபிள்ளைகளிடம் பழகுவது போல் தொடர்பு கொண்டு, தாங்கள் எடுத்துச் சென்ற ஆகாரத்தைக் கொடுத்து, ஊட்டிவிட்டுப் பழக்கி அரைகுறையாக உபதேசித்து, ஏதோ இவ்வூருக்கு அவர்கள் கூப்பிட்டால் வரக்கூடிய அளவிற்கு

யோகி ஸ்ரீராம் பாபா

ஒரு தொடர்பை உண்டு பண்ணி விட்டார்கள். அவ்வாறே அழைத்தும் வந்தனர்.

இவ்வாறிருக்கும் சமயத்தில் சுவாமிகள் சிலகாலம் கோனூரிலும், சில தினங்கள் வெல்லம்பட்டியிலும் திரிந்துள்ளார்கள் இதைக் கண்ணுற்ற கசவைப் பெரியோர்கள், சுவாமியை ஊருக்கே அழைத்து வந்துவிட்டார்கள். ஊருக்கு அழைத்து வந்து, நீராடச் செய்து அவருக்கு ஆடை அணிவித்திருக்கிறார்கள். சிறிது நேரத்தில் அதை சுவாமியவர்கள் கந்தல் கந்தலாக கிழித்து எறிந்துள்ளார்கள். இவ்வாறு பலமுறை செய்தும் பலனளிக்காமல் போகவே, அவரைப் பிறவிக்கோலத்துடனேயே விட்டுவிட்டனர். சுவாமியவர்கள் பிறவிக்கோலத்துடன் இருப்பது கண்டு மக்கள் கூச்சமோ, அருவருப்போ அடைந்தது கிடையாது, மாறாகத் தெய்வப் பிறவியாக அவதார புருஷராக ஏற்கத் தொடங்கினார்.

அடிக்கடி வேறு ஊர்களுக்குச் சென்று விடுவார்கள். பிறகு ஊர்க்காரர்கள் சென்று அழைத்து வருவார்கள். அவ்வாறு சென்ற விடங்களில் ஈனர்களால் பல இன்னல்களுக்கு ஆளானார்கள். ஆனால் யார் அடித்தாலும் சிரித்துக்கொண்டே இருப்பார்கள். இத் தெய்வக் குழந்தையை, ஊர மக்கள் அவரை நிலையாக கசவனம்பட்டியிலே இருக்குமாறு செய்தனர். யாரேனும் ஒருவர் அவர் கூடவே இருந்து காவல் காத்தனர்.

பகலில் சுவாமிகள் ஊரின்





நாலாபுறங்களிலும் திரிவார். குறிபாக அருள்மிகு சிவசக்தி கோயில், மாலா கோயில், பூங்காணியம்மன் கோயில் சுற்றுப்புறங்களில் இருப்பார். சிறு குச்சிகளால் தரையில் கிறுக்கிக்கொண்டே இருப்பார். பகலிலும் இரவிலும் பெரும்பாலும் முத்தாலம்மன் கோயிலில் அமர்ந்திருப்பார். இரவில் முத்தாலம்மன் கோயிலின் மூலஸ்தானத்தில் பள்ளிகொள்வது வழக்கம். அதற்காக ஒரு கட்டிலும் விரிப்பும் போட்டுவைத்துவிடுவர். அவ்வாறு சுவாமிகள் பயன்படுத்திய கட்டில் இன்னும் பாதுகாக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுவாமியவர்கள் ஊரில் உள்ள அனைவரின் வீட்டிற்கும் விளையாடித் திரியும் குழந்தையைப் போல போவார்கள். வருவார்கள். இது நல்ல வீடு, கெட்ட வீடு என்ற பாகுபாடு கிடையாது. அவரவருக்குத் தகுந்தவாறு கூழைக்கலக்கி, சிறிது வெங்காயம், இரண்டு மிளகாய் போன்றவை கொடுத்தால் சுவாமியவர்கள் அதை வாங்கி அன்புடன் குடிப்பதை நாங்கள் கண்குளிரக் கண்டதுண்டு. அதே நேரத்தில் பெரும் பணக்காரர்கள் அனைத்து வகை உயர்பதார்த்தங்களை வைத்துக் கொண்டு சுவாமிகளைப் பின் தொடர்ந்து சென்று படைத்தாலும் எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

பக்தர்கள் கொண்டு வரும் உயர்வகைப் பதார்த்தங்களை சுவாமிகள் விரும்பிச் சாப்பிட்டதில்லை. மாறாக அரிசி, கீரை, உணவுகளை சிறிது எடுத்துக் கொள்வார்கள். பக்தர்களால் அன்புடன்

கொடுக்கப்படும், டீ, காபி, பால் போன்ற பானங்களை மருந்து குடிப்பது போல் குடிப்பார்கள். அதாவது கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்துக் குடிக்காமல், மடக்கென்று வேகமாகக் குடித்து விடுவார்கள்.

சிகரெட்டை மட்டும் வேண்டாமென்று கூறியது கிடையாது. சுவையான பதார்த்தங்கள் எதையும் விரும்பிச் சாப்பிடாத சுவாமிகள், சிகரெட்டில் மட்டும் அவ்வளவு பியும் காட்டியது ஏன்? இதில் ஓர் ஆழ்ந்த உட்கருத்து உள்ளது. உடல் நலத்திற்குத் தீங்கிழைக்கக் கூடிய இதை அனைத்தும் அறிந்த நமது சுவாமிகள் நன்கு அறிந்தவர்கள்தான். இருப்பினும் பிறர் கொடுத்த சிகரெட்டுகளைப் புகைத்ததன் மூலம், அவர்களுடைய பாவங்களையும், துன்பங்களையும் தான் ஏற்றுக் கொண்டு அருள் புரிவதற்காகவே அவ்வாறு செய்தார்கள் என்பது தெளிவு.

சுவாமிகள் பெரும்பாலும் மண்தரையில்தான் உட்காருவார்கள். உட்கார்ந்திருக்குமிடத்தில் குச்சிளைப் பொறுக்கிக் கிறுக்கிக் கொண்டே இருப்பார்கள். சாதாரணமானவனுக்கு என்னடா தரையில் கிறுக்கிக் கொண்டே இருக்கின்றார். என நினைக்கத் தோன்றும். ஆனால் அவ்வாறு எழுதுவது அன்று வந்துள்ள பக்தனின் தலையெழுத்தை மாற்றத்தான், சுவாமியவர்கள் அவ்வாறு கிறுக்கி அந்தக் குச்சிகளை அந்தந்த பக்தர்களுக்கே வழங்குவதுண்டு.

இயற்கை அன்னை தன்னைப்



படைத்த வண்ணமே காட்சி அளித்த சுவாமிகள் பார்வைக்கு ஓர் ஏழை விவசாயி போல் காணப்பட்டார்கள். ஊர் மக்களும், வரும் பக்தர்களும் அவருக்கு நெற்றி மற்றும் உடல் முழுவதும் திருநீறு பூசி, சந்தனமிட்டு, குங்குமமிட்டு விபூதியை பக்தர்கள் விரலால் எடுத்து நெற்றியில் பூசிக் கொள்வார்கள். போவோர், வருவோர் எல்லோரும் அவர்களின் காலைத் தொட்டு வணங்கிச் செல்வது வழக்கம். சுவாமிகள் எதையும் பொருட்படுத்தமாட்டார்கள். அவர்கள் ஏதோ ஆகாயத்தைப் பார்ப்பது போன்று பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

பொதுவாக இந்த ஞானி எவடமும் பேசியது கிடையாது இருப்பினும் சுவாமிகளைக் காண



வரும் பக்தர்கள் எந்த மொழியில் பேசினாலும், உம் போயிட்டு வா, போ, நடக்கும் என்று ஒரிரு வார்த்தைகள் அந்தந்த மொழியில் பதில் கூறி அனுப்புவார்கள். அதைக் கண்டு வியப்புற்றோர் ஏராளம். எந்நேரமும் யாருக்கும் புலப்படாத பாஷையில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள்.

சுவாமிகளுக்குச் சிற்சில நேரங்களில் கோபம் வருவதுண்டு. ஆனால் அது வெறும் தோற்றமே. அவரை நாடி வந்த பக்தர்களுக்குச் சில உண்மைகளை உணர்த்தும் பொருட்டும், அவர்களைத் திருத்தும் பொருட்டும் கோபத்தைக் காட்டுவார்கள். அஃது அவர்களுக்குப் புரிவதற்குத் தகுந்த பக்குவமில்லாமல் காலம் கடந்து புரிந்து கொண்டவர்களும் உண்டு. உடனே புரிந்து அவர் மகிமையை உணர்ந்தவர்களும் உண்டு.

தன்னை நாடி வந்த பக்தர்களுக்கு அருள் வழங்குவதில் சுவாமிகள் ஒரு வினோதமான முறையைக் கையாண்டார்கள். கையை உயர்த்தியோ அல்லது தலையைத் தொட்டோ அவர்கள் ஆசிவழங்கியதில்லை. அருள் புரிந்ததில்லை. கையால் அறைந்தும், காலால் உதைத்தும், அடிப்பது போல் அணைத்தும், வெறுப்பது போல் காட்டி அன்பு செலுத்தியும் திட்டுவது போல் திட்டி ஆசீர்வதித்தும் அருள்புரிந்தார்கள். சுவாமிகளிடம் அடியும், உதையும் பெற்றவாகள் அவற்றின் உட்பொருளை அப்போது உணர்ந்தார்களோ இல்லையோ தெரியாது, ஆனால் பிற்காலத்தில் அவற்றால் பெரும்பேறு பெற்றதாக உணர்ந்தார்கள்.

சுவாமிகளுடைய திருமேனி எக்காலத்திலும் பெரும்பிணி எதுவாலும் பீடிக்கப்பட்டது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஒரு போதும் மருந்துகள் உட்கொண்டது இல்லை. ஒரு சமயம் ஒரு வெறிநாயால் கடிக்கப்பட்ட போது கூட வைத்தியம் செய்து கொள்ள மறுத்துவிட்டார்கள். இருப்பினும் அந்தக்காயம் ஒருநாட்களில் தானாகவே குணமடைந்துவிட்டது.

பல பெரிய மகான்களுடைய உடல்களெல்லாம் தங்கள் அடியார்களுக்கும், சீடர்களுக்கும் அருள் புரிந்த காலத்தில் அவர்களுடைய பாவங்களை ஏற்றதனால் அம்மகான் களுடைய உடல்கள் துன்புற்றதாக விளக்கம்

அளிக்கப்படுகிறது. ஆனால் அனைத்தையும் பஸ்பமாக்கும் பிரம்மாக்கினியாய் விளங்கிய நமது சுவாமிகளின் திருமேனியை எந்தவொரு பாவமோ, தோஷமே தீண்ட முடியவில்லை.

எல்லையற்ற பரம் பொருளின் ஈடு இணையற்ற வெளிப்பாடாகவும், நம்பிக்கைக்கும், பலத்திற்கும் கலங்கரை விளக்காகவும், அருளுக்கும், கருணைக்கும் ஊற்றாகவும், அமைதி, ஆனந்தம் ஆகியவற்றின் வடிவாகவும் எழுந்தருளியிருந்த இந்த மகாபுருஷர் தன்னுடைய மானிட லீலையை முடித்துக் கொண்டு துந்துபி வருடம், ஐப்பசி மாதம் 5 ஆம் நாள் (22.10.1982) வெள்ளிக்கிழமை மூல நட்சத்திரத்தில், அதிகாலையில் தனது பரிபூரண பிரம்ம நிலைக்கு மீண்டார்கள்.

சுவாமியவர்கள் மகா சமாதி அடைந்து மறுநாள் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை தனது ஆன்ம ஒளியை உடலிலிருந்து பிரிக்காமலேயே பிரகாசித்திருந்தார்கள். மறுநாள் ஐப்பசி மாதம் ஆறாம் நாள் (23–10–1982) சனிக்கிழமை சமாதி வைக்கும் நேரத்தில் அதுவரை வெளிர்ந்திருந்த வெண்மேகக் கூட்டங்கள், சுருண்டு திரண்டு, அந்தக் குறிப்பிட்ட எல்லையில் மட்டும் முக்கோடி தேவர்கள் பூமாரி பொழிந்தது போல், கனமழை பெய்தது. மகானுடைய தவ ஆற்றலுக்கு மாபெரும் சாட்சியாய் அமைந்தது.



கருடன் மும்முறை வட்டமிட்டு வலம் வர, ஆன்ம ஜோதி அருள் ஜோதியாகப் பக்தர்களுக்குப் பிரகாசிக்க, சுவாமியவர்களின் திருமேனி, சுவாமிகளுக்காக அமைக்கப்பட்ட குகைக்கோயிலில் முறைப்படி வைக்கப்பட்டு, வேத முறைப்படி சகல அபிஷேங்களும் செய்யப்பட்டு, கற்பூரம், விபூதி, சந்தனம், பன்னீர் ஜவ்வாது மற்று முள்ள வாசனைத் திரவியங்களால் நிறைவு செய்யப் பட்டது.

திண்டுக்கல்லில் இருந்து கன்னிவாடி அருகில் இருக்கும் கசவனம்பட்டிக்கு திண்டுக்கல்லிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

கோவில் திறந்திருக்கும் நேரம்: காலை 4:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை.

முகவரி: ஸ்ரீ ஜோதி மௌனகுரு நிர்வாண சுவாமிகள் ஆலயம், கசவனம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் – 624705. ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 85 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

சி.கே. மாலினி, கோவை. ரூ.500.
திருமதி. கலையரசி. அயனாவரம். ரூ.200
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு. கோபிநாத், தாம்பரம். ரூ. 200
திரு. ரமேஷ், குடந்தை. ரூ.150.
திரு.பி.சங்கமேஸ்வரன். அம்பத்தூர். ரூ.150.
திரு. வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திருமதி. இந்துமதி, அயனாவரம்.ரூ. 100.
திரு. நாகேந்திரன், குடவாசல். ரூ. 100.

நரசிம்மசுவாமிஜியின் அனுபவம்

திரு.நரசிம்மசுவாமி அவர்களுக்கு சாயி பாபாவிடம் இருந்து கிடைத்த இறை ஞானத்தை தவிர இன்னொரு அற்புதமான ஞானமும் கொடுக்கப்பட்டது.

1936 ஆம் ஆண்டு, நவம்பர் இல்லை டிசம்பராக இருக்கும், திரு. உபாசினி மகராஜ் அவர்கள் சாயி அடியவர்களுக்கு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து இருந்தார். அதில் சுவாமி ராம் பாபா என்பவரும் கலந்து கொண்டார்.

அந்த நேரத்தில் மிகவும் மோசமான உடலமைப்புடன் இருந்த ஒரு தொழு நோயாளியும் அங்கு வந்தார். பார்க்கவே அருவருப்பும், நாற்றமும் அடித்துக் கொண்டு இருந்த தொழுநோயாளியைக் கண்டு வந்திருந்த விருந்தினர் அனைவரும் முகம் சுழித்து அருவருப்புடன் ஒதுங்கி நின்றனர்.

வந்தவருக்கு உன் கையால் உணவு கொடு என உபாசினி மகராஜ் ராம் பாபாவிடம் கூறினார். உடனே ராம் பாபா தொழுநோயாளியை அமர வைத்து அவருக்கு உணவு பரிமாறினார். ஆனால் அவரால் உணவை அருந்த முடியவில்லை.

அதனைக்கண்ட உபாசினி மகராஜ், ராம் பாபாவிடம், அவரால் உணவு அருந்த முடிய வில்லை அல்லவா? பரவாயில்லை அவருக்கு ஊட்டி விடு என்று கூறினார்.

உபாசினி மகராஜ் அவர் களின் வார்த்தையை தட்ட முடியா மல் சுவாமி ராம் பாபாவும், கூடுமானவரை அந்த தொழு நோயாளியின் ரத்தம் வழிந்து கொண்டு இருந்த உதடுகளில் தன்னுடைய கைகள் பட்டு





விடாதபடி பார்த்துக் கொண்டு உணவு கொடுத்தார். அதனால் சிறிது உணவு கிழே விழுந்தது.

அதன் பின் அந்த தொழு நோயாளி போய்விட அவர் விட்டுச் சென்ற உணவை அருந்துமாறு உபாசினி மகராஜ் சுவாமி ராம் பாபாவிடம் கூறினார். அந்த உணவிலோ சிறிது ரத்தமும் சிந்தி இருந்தது. அருவருப்பினால் எத்தனை முயன்றும் அவரால் ஒரு கவளம் கூட சாப்பிட முடியவில்லை.

அதற்குப் பின் உபாசினி மகராஜ் நரசிம்மஸ்வாமியை பார்க்க அவர் முன் வந்து சற்றும் தாமதிக்காமல், அந்த நோயாளி விட்டுச் சென்றிருந்த உணவை கொஞ்சம் கூட முகம் கோணாமல் அருந்தினார்.

பின்னர் கூடி இருந்த அனை வரிடமும் உபாசினி மகராஜ் கூறினார், நீங்கள் எவராவது விருந் திற்கு வந்த தொழு நோயாளியை கவனித்தீர்களா? எத்தனை விரைவாக அவர் திரும்பிச் சென்றார் பார்த்தீர்களா? உண்மையிலேயே தொழு நோயாளியாக இருந்திருந்தால் அப்படி சென்று இருக்க முடியுமா? வந்தவர் வேறு யாரும் அல்ல. அவரேதான் சாயிநாதர். அவரை நரசிம்மசுவாமியால்தான் அடை யாளம் கண்டுகொள்ள முடிந்திருக் கின்றது. என்று கூறினார்.

அந்த நிகழ்ச்சியைக் கண்ட நரசிம்மசுவாமி தனக்கு வெளி வேஷத்தைக் கண்டு மயங்கக் கூடாது என்ற உபதேசம் செய்யவே சாயிநாதர் அப்படிப்பட்ட வேஷத் தில் வந்திருக்கின்றார் என்பதை உணர்ந்து கொண்டார்.

அந்த நிகழ்ச்சியே நரசிம்ம சுவாமியின் வாழ்வில் பெரிய பாடத்தை புகட்டியது. அவருடைய வாழ்க்கை முழுவதும் அவரது ஆன்மீக பயணத்தை சாயிநாதரே வழி நடத்திச் சென்று கொண்டு இருந்தார் .

ஓம் சாய்ராம்! ஜெய் சாய்ராம்!

உண்மையான ஆனந்தம்

ஒருமுறை சீரடியில் சிறுவர்கள் கூட்டம் ஒன்று, வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களுடைய செருப்பு முதலான அவர்களின் உடைமைகளை திருடி ஒளித்து வைத்து விட்டு மறைவாய் இருந்து ரசித்து பார்த்து கொண்டிருந்தனர்.

வேலை முடிந்து திரும்பி வந்த தொழிலாளர்கள் தமது உடைமைகளை காணாததைக் கண்டு வருந்துவதைக் பார்த்து சிறுவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விபரம் அறியாத வயதில் அடுத்த வரை துன்பப்படுத்தி அதில் எழும் சந்தோசத்தை அனுபவிப்பதே மனிதர்களின் வழக்கமாகும். சரியான நேரத்தில் ஞானகுருவின் போதனைகள் அவர்களின் காதுகளுக்கு எட்டாது போனால் இவர்களே வாழ்வின் இறுதி வரை அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசி அவர்களை வருந்த வைக்கின்றனர்.

இவைகளுக்கு முக்கிய காரணம் நான் யார் என்பதை பற்றி அறிய முயலாமல் இவ்வுலக பொருள்களின் மீதான ஆர்வமே காரண மாகும். இவர்களால் ஒரு போதும் எளிமையாய் வாழ்வது இயலாதது. கடைசிவரை எதிர்மறையான எண்ணங்களையே வெளிப்படுத்தி பிறரை துன்பத்தில் ஆழ்த்துவர்.


தன்னிடம் இல்லாத பொருள் அடுத்தவரிடம் இருக்கிறதா என்ற ஆராய்ச்சி செய்வார். அப்படி இருந்து விட்டால் அந்தப் பொருளை திருடியாவது தனக்கு சொந்தமாக்கி விட வேண்டும் என்று துடிப்பார். ஒன்றுக்கும் உதவாத பொருளாக கூட இருக்கலாம். அதை அடைந்த பின்னர் அதற்கு பின்னால் வரும் அசிங்கத்தை கூட நினைத்துப் பார்க்க மாட்டார்கள். இவர்களது வாழ்வு உலக சுகத்தை அனுபவிப்பதிலேயே இருக்கும். இந்த மாயையில் உழல்பவன் பல பிறவிகள் எடுக்க வேண்டி வரும்.

இவர்கள் எப்போதும் அடுத்த வரைப் பற்றியே சிந்தித்து வாழ்வதால் முயற்சி செய்தாலும் இவர்களால் எளிமையாய் வாழ இயலாது. தன்னை அறிவதே ஆனந்தம் அல்லவா. அதை விடுத்து எப்போதும் அடுத்தவரைப் பற்றி நினைப்பதும், அவர்கள் இதை குறித்தே வாழ்வதும் எவ்வாறு ஆனந்தம் ஆகும்.

அதனால் ஏற்படும் உண்மையான ஆனந்தம் எது என்பதை மிக அழகாக சிறுவர்களுக்கு ஒரு சிறிய நடைமுறையினால் சுட்டிக்காட்ட விரும்பி மறுநாள் மாலையில் அவர்கள் முன் தோன்றினார் பாபா.

அவர்கள் எப்போதும் போல தொழிலாளர்களின் உடைமைகளை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் சென்ற பாபா, சிறுவர்களே நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றார்.

அச்சிறுவர்களோ, நாங்கள் அந்த மனிதர்களின் செருப்புகளை ஒளித்து வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறோம். அவர்கள்



செருப்புகளைத் தேடி அலைவது பார்ப்பதற்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும். நீங்களும் விளையாட வருகிறீர்களா என்று அழைத்தனர்.

பாபா அவர்களிடம், இதை விட இன்னும் ஆனந்தமான விளையாட்டை நான் சொல்லித் தருகிறேன் வருகிறீர்களா என அழைக்க அனைவரும் பாபாவிடம் ஓடி வந்தனர். பாபா தன் சட்டைப்பையில் கையை விட்டு சில வெள்ளிக்காசுகளை எடுத்தார். அதை அந்த சிறுவர்களை அழைத்து ஒவ்வொரு சோடி செருப்புகளிலும் ஒரு வெள்ளி காசை வைத்து விட்டு வருமாறு கூறினார்.

அவர்களும் அப்படியே செய்தனர். அதன் பின்பு அனைவரும் புதர்களின் மறைவில் அமர்ந்தபடி என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்த்தனர். பணி முடிந்து திரும்பிய வேலையாட்கள் தங்களின் செருப்புகளில் வெள்ளிக்காசு இருப்பதை கண்டவர்கள் அளவில்லா ஆனந்தம் அடைந்து, அந்த வெள்ளிக் காசை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு ஆனந்தமாய் சென்றனர்.

அதை பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு அடுத்தவரை துன்பப்படுத்தி சந்தோசப்படுவது மட்டுமல்ல ஆனந்தம், அவர்களை துன்புறுத்தாமல் சந்தோசப் படுத்துவதும் ஆனந்தமே என்ற உண்மை விளங்கியது.

பாபா காட்டும் வழியும் இதுவே ஆகும். சிறுவர்களைப் பார்த்து புன்னகைத்தபடி அவ்விடத்தை விட்டு அகன்றார் பாபா.

வாத நோய்களை போக்கும்

வாதநாராயணன் கீரை

மனித உடலில் வாதம், பித்தம், கபம் மூன்றும் சம நிலையில் இருக்க வேண்டும். இவற்றில் ஒன்றுகூடினாலும் குறைந்தாலும் ஆரோக்கிய குறைபாட்டை சந்திக்க நேரிடும்.

வாத நாராயணன் கீரை என்பது மரம் போன்று வளரக்கூடியது. பார்க்க புளிய மரத்தின் இலைகளை போன்று இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். வாத நோய்கள் அண்டாமல் இருக்க நமது முன்னோர்கள் வாரந்தோறும் இதன் இலைகளை கீரை போன்று சமைத்து சாப்பிட்டார்கள். வாதநோய்களை நீக்கைவதால் இதற்கு வாதநாராயணன் கீரை என்னும் பெயர்பெற்றது.

வாத நாராயணன் தரும் நன்மைகளை தெரிந்துகொள்வோம். முடக்குவாத நோய்களை தீர்க்க அந்த காலத்தில் கை வைத்தியத்தில் வாத நாராயணன் கீரையை தான் பயன்படுத்திவந்தார்கள். ருமட்டாய்டு ஆர்த்ரைட்டீஸ் பிரச்சனை இருப்பவர்களுக்கு கை, கால், விரல்கள் மூட்டுகளில் வீக்கத்தையும் வலியையும் உண்டாக்கும். இதனால் கை, கால் அசைக்க முடியாமல் முடக்கிவிடும்.

இவர்களுக்கு காலை நேரத்தில் வலியுடன் மூட்டுகளில் இளஞ்சூடு இருக்கும்.

இவர்கள் வாத இலையை நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி குடித்துவந்தால் நோய் தீவிரமும் வலியும் குறைவதை உணரலாம். காலை வேளையில் எழுந்ததும் வாதநாராயணன் இலையை கடுகு எண்ணெயுடன் கலந்து மைய அரைத்து வலி இருக்கும் இடத்தில் தடவி வந்தால் வீக்கம், இளஞ்சூடு உணர்வு தணியும்.

மூளைக்குள் போதுமான அளவு ஆக்சிஜன் செல்லாமல் இருக்கும் போது, ரத்தக் கட்டு ஏற்படும் போது பக்கவாதத்தை சந்திக்க கூடும். இதனால் பாதிக்கப்படும் உடல் பகுதியானது கை, கால்,முகத்தில் ஒரு பகுதி செயல் இழுப்பது போன்ற அறிகுறிகளை உணர முடியும்.

சிலருக்கு பேசும் போது வார்த்தை தெளிவான உச்சரிப் பின்றி குழறவும் கூடும். இந்த அறி குறிகள் தென்பட்டால் உடனடியாக வாத நாராயாணன் பொடியை

தினமும் இரவு தூங்கும் போது ஒரு டம்ளர் வெந்நீரில் அரை டீஸ்பூன் அளவு கலந்து குடித்து வர வேண்டும். அறிகுறி மறைய தொடங்கினாலும் மருத்துவ பரிசோதனையும் செய்து கொள்வதன் மூலம் பக்கவாதம் வராமல் தடுக்கமுடியும்.

உடலில் மூட்டுகளிலும் ஆங்காங்கே தேங்கியிருக்கும் வாத நீர் அதிகமானால் மூட்டுகளில் வீக்கம் இருக்கும். கை, கால் குடைச்சல் அதிகமாக இருக்கும். இதை போக்க வாத நாராயணன் இலையை உளுந்து சேர்த்து துவையலாக்கி சாப்பிட்டு வந்தால் உடலில் இருக்கும் வாத நீர் மலத்தில் வெளியேறி விடும்.



உடலில் இருக்கும் வாதத்தை அவ்வபோது வெளியேற்ற மாதம் ஒருமுறை வாதநாராயணன் இலை பொடி ஒரு டீஸ்பூன் எடுத்து கொண்டு, மூக்கிரட்டை வேர் பொடி கால் டீஸ்பூன் எடுத்து கொண்டு, அதனுடன் அரை டீஸ்புன் அளவு விளக்கெண்ணெய் சேர்த்து குழைத்து இலேசாக சூடுபடுத்தவும். இதை அரை டீ ஸ்பூன் அளவு உள்ளுக்கு எடுத்து கொண்டால் மறுநாள் மலத்தில் வாதம் வெளியேறும்.

ஆரம்பத்தில் இதை சாப்பிடும் போது இரண்டு மூன்று முறை வயிற்றுப்போக்கு உண்டாகும். இவை வாதத்தை வெளியேற்றி விடும். இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாவது எடுத்துகொள்வது நல்லது. நரம்புத்தளர்ச்சி இருப்பவர்கள் பக்கவிளைவில்லா மல் பொறுமையாக குணமாக வாத நாராயணன் தைலத்தை காய்ச்சி தினமும் குடித்துவரலாம்.

வாத இலையை அரைத்து அதன் சாறை எடுக்கவும். சாறின் அளவுக்கேற்ப சம அளவு விளக்கெண்ணெய் எடுத்து கொள்ளவும். அரை லிட்டர் அளவு இருந்தால் சுக்கு, மிளகு, திப்பிலி, வெண்கடுகு – தலா 25 கிராம் எடுத்து வாத நாராயணன் இலை சாறு கொண்டு மைய அரைக்க வேண்டும். பிறகு அனைத்தையும் ஒன்றாக கலந்து அடுப்பில் மிதமான தீயில் வைத்து காய்ச்ச வேண்டும்.

இவை அனைத்தும் சேர்ந்து மெழுகுப் பதத்துக்கு வரும் போது இறக்கி ஆறவைத்து வடிகட்டி வைக்கவும். தினமும் காலை வேளையில் 5 மில்லி அளவு பசும்பாலில் கலந்து குடித்து வந்தால் நரம்புத்தளர்ச்சி கட்டுப்படும்.அதோடு கீல்வாதம், பக்கவாதம், மூட்டு விக்கம், குதிகால் வலி போன்ற நோய்களும் கட்டுப்படும்.

உடல் வலி , உடல் சோர்வு இருந் தால் வாதநாராயணன் இலையை நீரில் கொதிக்க வைத்து உடலில் ஊற்றி குளிக்க வேண்டும். வாரம் ஒருமுறை வாத நாராயணன் கீரையை பருப்பு கலந்து சேர்த்து சாப் பிட்டு வந்தாலே நரம்புகள் பலப் படும். ரத்த ஓட்டமும் சீர்படும். முட் டிகளில் வலி வீக்கம் உண்டாகாது.

மூட்டுகளில் நாள்பட்ட வீக்கம் இருந்தால் வாதநாராயணன் இலைகளுடன் சிறிதளவு அரிசி தவிடு விளக்கெண்ணெய் சில துளிகள் விட்டு நன்றாக வதக்கி மெல்லிய துணியில் போட்டு பந்து போல் சுருட்டி முடித்து வீக்கம் இருக்கும் பகுதியில் ஒற்றடம் கொடுத்து வரலாம். இதனால் எப்பேர்பட்ட வீக்கமும் குணமாகும். வாத நாராயணன் கீரை கிடைக்காவிட்டால் நாட்டு மருந்து கடைகளில் வாத நாராயணன் தைலம் கிடைக்கும். அதையும் மேற்பூச்சாக பூசலாம். பலன் கிடைக்கும்.

குருவுடன் இலங்கை பயணம்

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்,

நான் கடந்த 10 மாதங்களாக சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப் பாளராக, குருஜி யோகி ஸ்ரீராம் பாபா அவர்களுடன் பயணித்து வருகிறேன்.சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் "மௌனத் தின் மூலம் தவம்" வகுப்புகளின் நிறைவு பயிற்சிக்காக கடந்த செப்டம்பர் 12 ந்தேதி குருவுடன் நானும் இலங்கைக்கு சென்றேன்.

இலங்கை வகுப்பு ஒருங்கிணைப் பாளரான திரு.ரவி சங்கர் அவர்கள் எங்களை வரவேற்று அவரது வீட்டில் நான்கு நாட்கள் தங்க வைத்து அன்புடன் உபசரித்தார். அவரது மனைவி திருமதி. தனுசியா மற்றும் குழந்தைகள் வெகுநாட்களாக பழகியது போல எங்களுடன் பழகினார்கள்

செப்டம்பர் 12 ஆம் தேதி மாலை கொழும்பு கொட்டாஞ் சேணை என்ற ஊரில் உள்ள முருகன் கோவிலில் "ஞான பெருஞ் சுடர்" ஸ்ரீ கந்த பெருமான் என்னும் தலைப்பில குரு அவர்கள் ஞானக் கடவுளான முருகப் பெருமானைப் பற்றிய அரிய தகவல்களை கூறி சொற்பொழி வாற்றினார். பக்தர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கேட்டு ரசித்தனர். நிகழ்ச்சி முடிவில் கோவில் நிர்வாகத்தினர் குருவிற்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர்.

அடுத்த நாளான செப்டம்பர் 13 அன்று மௌனம் நிகழ்ச்சி



நடைபெற்றது. பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் அற்புதமான உணர்வுகளை பெற்றதாகக் குறிப்பிட்டனர். தங்களின் பல நாட்கள் பிரார்த்தனையின் விளைவாகத் தான் உடலுடன் வாழும் குருவை சாயிநாதர் இலங்கைக்கு அனுப்பியிருக்கிறார் என்று கூறி ஆனந்தம் அடைந்தனர். தியான தீட்சையின் போது, தங்களுக்குள் இனம் புரியாத நம்பிக்கை மற்றும் தைரியம் உண்டானது மட்டும் அல்லாமல், தங்களுக்குள் பல காலமாக இருந்த சந்தேகங்கள் மற்றும் அழுத்தங்கள் அகன்றன என்று உள்ளம் மகிழ்ந்து கூறினர்.

அடுத்தநாள் ஞாயிறு, செப்டம்பர் 14 அன்று குருவின் நெடுநாளைய விருப்பமான கதிர்காமம் செல்ல முடிவெடுத்து திரு. ரவி சங்கர் மற்றும் அவர் குடும்பத்தினருடன் அதிகாலை 5 மணிக்கு ஒரு வாகனத்தில் கதிர்காமம் புறப்பட்டோம்.வழியில் கண்டி என்னும் இடத்தில் காலை உணவை முடிந்துகொண்டு இயற்கை அழகை ரசித்துக்கொண்டே கடற்கரை சாலையில் சுமார் 5 மணிநேர பயணித்து கதிர்காமம் சென்றடைந்தோம்.

அங்கு விநாயகர் கோவில் எழுதப்பட்டிருந்த ஒரு ஸ்லோகத்தை குரு அவர்கள் படித்துக் காட்டி, அதில் குறிப்பிடப்பட்டிருந்த 'குண்டலினி' எனும் வார்த்தையை சுட்டிக்காட்டி குண்டலினி சக்திக்கும் விநாயகர் வடிவத்திற்கும் உள்ள தத்துவங்களை எடுத்துக் கூறினார்.

எஸ்.ஆர். பாலாஜி

புராதனமான கோவில்களுக்கு செல்லும் போது நம் மனதில் இருக்கும் கவலைகள் மற்றும் பிரார்த்தனைகளை சுமந்து கொண்டு செல்லாமல், சுற்றி இருக்கும் அனைத்தையும் கவனித்து கிரகித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமக்கு ஞானம் விருத்தியாகும் என்று அறிவுரை வழங்கினார். பின்னர் வள்ளி வாழ்ந்த குகைக்கு சென்றோம்.

பின்னர் மலை மேல் இருக்கும் முருகன் கோவிலுக்கு அங்கிருந்த ஜீப் மூலமாக சென்றோம். அந்த கோவிலில்தான் வள்ளியை முருகப்பெருமான் மணம் முடித்த தாக கூறப்படுகிறது. அங்கு முருகப்பெருமானின் பொருட்கள் அடங்கிய பெட்டி இருப்பதாகக் கூறப்படுகிறது. அங்கு முருக பெருமான் சிலைவடிவமாக வணங்கப்படாமல், தமிழரின் ஆதிவழி பாடான வேல் மட்டும் வைத்து வழிபடப்படுகிறது.

அங்கு தியானம் செய்ய வேண்டும் என்று எனக்கு தோன்றியது, அதனால் நான் ஒரு தனிமையான இடத்தில் சென்று அமர்ந்து கொண்டேன். அப்போது குரு அவர்கள் என்னருகில் வந்து என்னுடைய ஆஞ்ஞா சக்கரத்தை தூண்டிவிட்டு சென்றார்கள். நான் தியானத்தை முடித்ததும் இதை குருவிடம் கேட்டு அறிந்து கொண்டேன். மூன்றாவது கண் இருக்கும் சக்கரம் தூண்டப்பட்டால், ஞானக் கதவு திறக்கும் என்பது நாம் அனைவரும் அறிந்தது தானே! முருகப்பெருமான் ஞானக்கடவுள் அல்லவா! அதற்கேற்றாற்போல் குருவின் செயல்பாடுகளும் இருந்தன.

செல்லும் வழி எங்கும் குரு அவர்கள் இலங்கை பற்றியும் முருகப்பெருமானைப் பற்றியும் விவரித்துக்கொண்டே வந்தார்கள். அவற்றில் என் நினைவில் பதிந்தவைகள் சிலவற்றை கூறுகிறேன், "முருகப்பெருமான் குமரிக் கண்டத்தில் பிறந்து, கதிர்காமத்தில் வள்ளியை மணந்துகொண்டார். குமரிக் கண்டத்தை இப்போது கடல் கொண்டு விட்டது. மீதம் இருக்கும் இடம்தான் இலங்கை.

முருகன் மாவீரன். பிற்பாடு பழனியை மையமாகக்கொண்டு ஆண்டுவந்தார். அதனால்தான் அவர் பழனி ஆண்டவர் என்ற பெயர் பெற்றார். அவர் ஆப்கானிஸ்தானில் உள்ள காந்தகார் வரை ஆட்சி புரிந்ததார். ஆகையால்தான் கந்தன் ஊர் என்பது மருவி கந்தகார் ஆயிற்று என்றார். சமீபத்தில் ஒரு வளைத்தளப்பதிவில் ஆப்கானிஸ்தான் கிராமம் ஒன்றில் இன்றும் வேலையும் மயிலையும் தங்களின் குலதெய்வமாக வழிபடும் பழங்குடி இஸ்லாமியர்களைப் பற்றிய டாக்குமெண்டரியை பார்த்தது என் நினைவிற்கு வந்தது.

அந்த இடத்தில் இருந்த ஒரு புத்தர் சிலையைக் சுட்டிக் காட்டி, "புத்தருக்கும் முருகப் பெருமானுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. இருவரும் ஞானத்தைத்தான் போதித்தனர்" என்று விளக்கிக் கூறினார்.

பின்னர் நாங்கள் மலையில் இருந்து ஜீப் மூலம் கீழே வந்து மதிய உணவருந்திவிட்டு அங்கிருக்கும் கதிர்காமம் முருகன் கோவிலுக்கு சென்றோம். வழியில் தாமிரபரணி என்ற பெயருடைய ஆற்றை கடந்து சென்றோம்.

இந்தியாவும் இலங்கையும் நிலப்பரப்பில் ஒன்றாக இணைந்து இருந்ததன் அடையாளமாக அதே பெயரில் அங்கும் தாமிரபரணி என்ற பெயரில் ஆறு ஒன்று இருப்பது ஒரு முக்கியமான சாட்சி. நாங்கள் அந்த கோவிலை சென்றடைந்த சமயம் கோவில் பூட்டப்பட்டிருந்தது. உடனே நாங்கள் அருகில் இருந்த புத்தர் ஆலயத்தை சுற்றி வந்தோம்.

அப்போது அங்கிருந்த மிகப் பெரிய அரசமரம் ஒன்று வேலியிடப்பட்டு, பாதுகாக்கப் பட்டிருந்தது. அந்த மரத்தை பார்த்தவுடன் குரு, அவர்கள் "இது 2000 வருடங்கள் பழமையானது" என்று கூறினார். உடன் இருந்த எங்களுக்கு சற்று சந்தேகம் ஏற்பட்டது. உடனே திரு.ரவிசங்கர் அவர்கள் அங்கிருந்த சிங்களர்களிடம் விசாரித்தார் அவர்கள் புத்தருக்கு ஞானம் வழங்கிய போதி மரத்தில் உருவான விதையில் இருந்துதான் இந்த மரம் உருவானதாக கூறினார்கள். நாங்கள் அனைவரும் குருவின் ஞான தீட்சண்யத்தை எண்ணி வியந்தோம்.

அடுத்ததாக இன்னொரு அற்புதம் நிகழ்ந்தது. எனக்கு அந்த இடத்தில் தியானம் செய்ய வேண்டும் என்று தோன்றியது. சற்று தூரத்தில் குரு அமர்ந்திருந்த இடத்திற்கு சென்று அமர்ந்து கொண்டேன் குருவிற்கு எதிரில்



ஒரு மூதாட்டி குப்பைகளுக்கு நடுவில் அமர்ந்து கொண்டிருந்தார்.

நான் என் தியானத்தை முடித்து கண்விழித்து பார்த்தபோது, அந்த மூதாட்டி குருவையே பார்த்துக் கொண்டு, சிங்களத்தில் கெட்ட வார்த்தைகளால் வசைபாடிக் கொண்டிருந்தார். நடுநடுவே தெளிவாக சில விஷயங்களையும் கூறிக்கொண்டிருந்தார். இது ஒரு புதுவிதமான சம்பாஷணையாக எனக்கு தெரிந்தது. நான் குருவிடம் மெதுவாக என் தியான அனுபவங்களை கூற, குருவோ மெதுவாக அந்த கிழவியை கவனியுங்கள் அவள் ஒரு சமணத்துறவி. நான் அவளிடம் இருந்து சில செய்திகளை வாங்கிக்கொண்டிருக்கின்றேன் என்றார்.

நானும் மெதுவாக கிழவியின் பக்கம் திரும்பி கவனிக்க ஆரம்பித்தேன். சிறிது நேரத்தில் இன்னொரு பெண் அவருக்கு அருகில் வந்து அமர்ந்தார் உடனே அந்த துறவி சிங்களத்தில் மேலும் கெட்ட வார்த்தைகள் பேச ஆரம்பித்தார். "எனக்கு கிடைக்க வேண்டிய தகவல்கள் கிடைத்து விட்டது புறப்படுங்கள்" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு புறப்பட்டார் குரு.

அங்கிருந்து விலகி வந்து குரு அவர்கள் திரு. ரவிசங்கர் அவர்களிடம் ஒரு புத்தகத்தின் பெயரைக்கூறி இந்தப்புத்தகத்தின் தமிழ் பதிப்பு எனக்கு கிடைக்குமா என்று கேட்க, அவரோ அந்த புத்தகம் எனக்குத் தெரிந்து சிங்களத்தில் மட்டும்தான் உள்ளது. வேண்டுமானால் எனது நண்பர்களிடம் விசாரிக்கின்றேன் என்று கூறியவர் அடுத்த இரண்டு நிமிடத்தில் குரு கேட்ட புத்தகத்தை பதிவிறக்கம் செய்து கொடுத்துவிட்டார். காலம் சரியாக இருந்தால் அனைத்துமே உடனடியாக நடந்துவிடும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டு.

அதன்பின்பு அந்த புத்தகத்தின் பெயர் மகாவம்சம் என்றும் அந்த புத்தகத்தை எனக்கு சூட்சும வடிவத்தில் சிபாரிசு செய்தது அந்த பைத்தியக்காரி போல் இருந்த சமணத்துறவி என்று குரு என்னிடம் கூறினார்.

நாம் கோவில் வந்த நேரம் பூட்டப்பட்டு இருக்கிறதே! நேரமும் விரயம் ஆகிக் கொண்டிருக்கிறது என்று நாங்கள் கவலைப்பட்ட போது, "எதுவும் காரணம் இல்லாமல் நடப்பதில்லை" என்று குரு கூறினார். "அந்த இடத்தில் இருக்கும் சக்தியை நாம் உணர்ந்து கொள்ள முருகப்பெருமான்தான் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறார்" என்று கூறிவிட்டு, என்னை பார்த்து, "நீங்கள் உள்ளே நுழையும்போது அந்த சக்தியை உணர்வீர்கள்" என்று கூறினார்.

குரு கூறியது போலவே நான் உள்ளே நுழையும்போது ஏதோ ஒன்று என்னை வெளியே தள்ளுவது போல உணர்ந்தேன். அதுதான் அங்குள்ள பேராற்றல் என்பதை புரிந்து கொண்டேன். பின்னர் ரவிசங்கர் அவர்கள் அங்கிருந்த கோவில் முக்கியஸ்தர்களிடம் அரைமணி நேரம் நின்று தரிசனம் செய்வதற்கான அனுமதி பெற்று வந்தார். ஆனால் குருவோ அதை தவிர்த்துவிட்டு, எங்களை அடுத்த இடத்திற்கு செல்லலாம் என்று துரிதப்படுத்தினார்.

நாங்கள் அடுத்ததாக ஒரு மாரியம்மன் கோவிலுக்கு சென்றோம். அங்கு யாருமில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, ஜடாமுடியுடன் இருந்த பூசாரி ஒருவர் கர்ப்பக்கிரகத்திலிருந்து வெளியே வந்து குருவை கண்ணோடு கண் நோக்கினார். உடனே அந்த கோவிலில் இருந்த சனீஸ்வரர் சிலைக்கு ஆரத்தி காட்டினார், அதே சமயத்தில் சாமியாடிக் கொண்டு ஒரு கூட்டம் வந்தது.



பூஜை முடிந்தது. சாமியாடிய கூட்டமும் நகர்ந்தது. எந்த பேச்சும் கிடையாது. குரு அங்கிருந்து புறப்பட்டார்.

இதற்கான விளக்கம் என்ன வென்று நான் குருவிடம் கேட்டேன் "என் ராசிப்படி எனக்கு இப்போது சனி கிரகத்தின் தாக்கம் 20 நாட்களுக்கு அதிகமாக இருக்கும். அதற்கான ப்ரீத்தியை செய்வதாக அவர் என்னிடம் கூறினார். நானும் அதற்கு சம்மதித்தேன்"

என்று விவரித்தார். குருவுடன் பயணிக்கும்போது ஒவ்வொரு நொடியும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டேன்.

அடுத்ததாக, நாங்கள் ஒரு மசூதிக்கு சென்றோம். காலையில் நாங்கள் புறப்படும் போதே அந்த இடத்தில் ஒரு மசூதி இருப்பதாக தனக்கு ஞான திருஷ்டியில் தெரிவதாகக் கூறி அங்கு முருகன் கோவிலுக்கு அருகில் மசூதி ஒன்று இருக்கின்றதா என்று திரு. ரவி அவர்களிடம் குரு கேட்டார். திரு. ரவி அவர்கள் அப்படி ஒரு மசூதி இருக்கிறது என்றும் தான் வெகுநாட்கள் முன்னர் சென்றிருப்பதாகவும் கூறினார்.

அந்த இடத்தில் ஒரு குரு மற்றும் ஒரு சிஷ்யரின் சமாதி இருந்தது. அங்கிருந்த 'Oasis of water' என்ற ஒரு இடத்திலிருந்து வரும் தண்ணீரை அருந்தினால் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்று கூறினார்கள். மேலும் முக்கியமாக, அங்கு ஒரு பெரிய பலகை வைக்கப்பட்டிருந்தது. அதில் அல்–கதிர் என்று குறிப்பிடப் பட்டு ஒரு கதை எழுதப்பட்டி ருந்தது.

பலநாட்களாக குரு முருகப் பெருமானைப் பற்றி விவரிக்கும் போதெல்லாம், அவரைப்பற்றிய குறிப்புகள் குர்ஆனில் உள்ளது என்று கூறுவார்கள். அதை நிரூபிக்கும் வகையில் அங்கு குறிப்பிடப்பட்டிருந்தது. ஆங்கிலத் தில் இருந்த பலகையில் ஒரு இடத்தில் Al-Khidr என்றும் இன்னொரு இடத்தில் Khider Gama (கதிர்காமத்தை) என்றும் குறிப்பிட்டிருந்ததை பார்த்து எனக்கு குழப்பம் உண்டானது.

நான் அந்த வார்த்தைகளை படித்துவிட்டு குருவிடம் விளக்கம் கேட்டேன். ஆனால் பதில் ஒரு வெளிநாட்டு பெண்மணியிடம் இருந்து வந்தது. அவர் எகிப்திய நாட்டை சேர்ந்த இஸ்லாமிய பெண். பெயர் ஹெலன். அவர் அந்த கதையை விவரித்துக் கூறினார். குரு அவர்கள் குர்ஆனை படிக்கவில்லை என்றாலும் அதில் இருக்கும் குறிப்புகளை அவர் அறிந்திருப்பது என்பது அவரின் ஞானத்தின் முதிர்ச்சி மற்றும் அவருக்கு இறைவன் அளிக்கும் வழிகாட்டுதலையும் எனக்கு புலப்படுத்தியது. நான் ஒரு சாதாரண மனிதருடன் பயணிக்கவில்லை என்பது எனக்கு நன்றாகப் புரிந்தது.

இத்துடன் எங்கள் கதிர்காமம் பயணம் முடிந்து. இரவு சுமார் 12.30 மணிக்கு கொழும்பு வந்தடைந்தோம். அடுத்தநாள் அவிசாவளையில் இருக்கும் சாயிபாபா கோவில் சென்று தரிசனம் செய்துவிட்டு, சில பக்தர்களின் வீடுகளுக்கு சென்று குரு ஆசீர்வாதம் செய்தார். மதியம் திருமதி. சரஸ்வதி அவர்களின் உபசரிப்பில் மதிய உணவை அருந்திவிட்டு அனைவரிடமும் பிரியாவிடை பெற்று சென்னை வந்து சேர்ந்தோம்.

குருவுடன் இருக்கும் ஒவ்வொரு நொடியும் ஞானம் என்பதை நான் இந்த பயணத்தில் அறிந்து கொண்டேன். குருவே சரணம். ●

வாசகர் குரல்...



பத்திரிக்கை உலகில் எட்டாவது ஆண்டாக, அதுவும் ஆன்மீக பத்திரிகை நடத்துவதென்பது மிகுந்த ஆச்சரியமளிக்கக் கூடியது. அதை ஆசிரியர் தனது குருவின் அருளால் சாதித்திருக்கின்றார். அவருக்கு எங்களது குடந்தை வட்ட நண்பர்கள் சார்பாக பரிபூரண வாழ்த்துக்களை தெரி வித்துக் கொள்கின்றோம்.

– குடந்தை வட்ட நண்பர்கள், குடந்தை.

சித்தர் தரிசனம் கட்டுரையில் இராமத்தேவர் கட்டுரை அசத்தல். கட்டுரையை வழங்கும் ஆசிரியர் அவர்களுக்கு வாழ்த்துக்கள். எங்களது மதுரைப் பகுதிக்கு உங்களை அன்போடு வரவேற்கின் றோம். இங்கு ஏராளமான சீவசமாதிகள் இருக்கின்றன. நாங்கள் உங்களுக்கு எப்போதும் உதவக்காத்திருக்கின்றோம். நன்றி!

– திரு. கதிரவன், மதுரை.

ஆசிரியர் அவர்களின் சாய்சரிதம், மற்றும் இனிய மொழிகள், அமுத மொழி மற்றும் அனைத்து கட்டுரைகளும் மிகவும் அருமை. எப்போதும்போல் இதழை எடுத்தவுடன் படித்து முடித்துவிட்டுதான் வேறு வேலை பார்க்க முடிந்தது. சந்தோசம்.

– திருமதி. கனிமொழி நாகலிங்கம். தாம்பரம்.

சிறந்த ஞான பெட்டகம்

தங்களது சாயி மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழின் எட்டா வது ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது குடும்பத்தார் சார்பாக எங்களது இதயம் கனிந்த வாழ்த் துக்கள். மேன்மேலும் உங்களது சாயி சேவை தொடர சற்குரு சாயி பாபாவிடம் பிரார்த் திக்கின்றோம்.

– திருமதி. ரோகிணி, செங்கல்பட்டு.

ஓம்காரத்தின் மகிமை பெட்டிச்செய்தி மிக அருமை பெரிய விளக்கத்தை சுருக்கமாக விளக்கியமைக்கு மிக்க நன்றி! நான் உங்களது புத்தகத்தை முதன் முறையாகப் படிக்கின்றேன். மிகவும் நன்றாக இருக்கின்றது.

முடக்கத்தான் கீரையை பற்றி அறிந்துகொண்டதில் பேரானந்தம் வாழ்க வளமுடன் அய்யா

– திருமதி. திலகம், சென்னை.

சாயி மகராஜ் குருவைத்தேடி இதழை முதன்முதலாக படிக்க நேர்ந்தது. இதழில் இடம் பெற்றி ருக்கும் அனைத்து கட்டுரைகளும் மிகவும் அற்புதம். அதிலும் சாய் சரிதம் புரியும்படி எளிதாக எழுதப் பட்டிருக்கின்றது. ஆசிரியருக்கு எமது நன்றிகள். வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம் கட்டுரை சிறப்பு. திருவருள்தேடி அனுபவ கட்டுரை மற்றும் சின்ன சின்ன செய்திகளும் ரசித்து படித்தேன். ஆசிரியர் குழுவினருக்கு எமது வாழ்த்துக்கள்.

– திரு. பாலசுப்பிரமணியன்.
பண்ருட்டி.

யோகிஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் படிக்கபடிக்க வியப்பாக இருக்கின்றது. அனைத் தையும் சேமித்து வருகின்றேன். சிறந்த ஞான பெட்டகமாக இருக் கின்றது. நான் தினந்தோறும் அதிலிருந்து ஒரு இனிய மொழி களைப் படித்த பிறகே அந்த நாளை தொடங்குகின்றேன். எனது மனமார்ந்த நன்றிகள் அய்யா.

– திரு. குமரேசன், தேனி.

சாயிபாபாவின் புகழ் பாடும் செய்திகள் அனைத்தும் மிக அருமை. ஆனால் மிக கொஞ் சமாக இருக்கின்றது. பாபாவைப் பற்றி இன்னும் நிறைய செய்திகளை வெளியிடுங்கள். சாய்சரிதம் படிப் பதற்கு மிக எளிமையாக இருக் கின்றது ஆசிரியர் திரு. ஸ்ரீராம் அவர்களுக்கு நன்றி! பாபாவை உணர்ந்து கொள்ளுங்கள் பெட்டிச் செய்தியில் "பாபா தனது பக்தர் களின் பின்னாலேயே இருந்து பாது காக்கின்றார் என்பது நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை. நன்றி!

– திரு. சாய்ரவி, சென்னை.

எனது குருஜி யோகி ஸ்ரீராம் பாபா நடத்தும் சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழின் எட்டாம் ஆண்டு துவக்க விழாவிற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். இதழில் வரும் கட்டுரைகளில் எனக்கு மிகவும் பிடித்த கட்டுரை திரு. நாராயணன் அவர்கள் எழுதும் வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம். மிக எளியவடிவில் ஞானமார்க்கத்தை புகட்டுகின்றது. நல்ல விளக்கம். தொடரட்டும் உங்களது மெய் ஞானப்பணி. வாழ்க வளமுடன்.

– திரு. அன்பழகன், குடந்தை.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
9941816692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: 9941816692

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி. தீபப்பிரியா, மாதவரம்,ரூ.3500.

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. நாககன்னி, வலங்கைமான். ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.

திருமதி. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.2000.

திருமதி.லட்சுமி, மந்தைவெளி, ரூ.1500.

திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திரு.நாராயணன்.திருப்பனந்தாள். ரூ.501
திரு. வெங்கடாசலம். டி.நகர். ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திருமதி. ஜெயசாந்தி, AYK, ரூ.500.
திருமதி. ஜெயந்தி தியாகராஜன். ரூ.500.
திரு.ரமேஷ்பாபு, சென்னை. ரூ.400.
திருமதி. லதா பாஸ்கரன். அண்ணாநகர்ரூ.300.
திருமதி. திலகம் கனி, கதிர். ரூ.300.
திரு. பிரசன்னா சர்வேஷ், ரூ.250.
திருமதி.ராகினி பாலமுருகன். ரூ.250.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.
திருமதி.லலிதா, துரைப்பாக்கம்.ரூ.200.
திரு. கோபால்சாய், விருகம்பாக்கம்.ரூ.200
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு.பி. சங்கமேஸ்வரன், அம்பத்தூர். ரூ.200
திருமதி. உமா, சின்னாளப்பட்டி. ரூ.250
வர்தினி, விசாலினி, சின்னாளப்பட்டி. ரூ.200.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100
திரு. வா.சூரியகுமார் கேபிள் TV. மாவுத்தன்பட்டி, ரூ.150.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',

9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,

அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM

INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai

AC.No: 6219480677

IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068